வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 20.02.2023 திங்கட்கிழமை | இதழ் : 73 | பக்கங்கள் : 16

# ஐ. எம். எவ். கடன் விவகாரத்தில் இலங்கையை கைவிடும் சீனா?

## ஜனாதிபதியின் அழைப்பை ஏற்கவும் மறுப்பு

கொழும்பு, பெப்ரவரி 20

**சர்வதேச நாணய நிதியத்துடனான (ஐ. எம். எவ்.) கடன் மறுசீரமைப்பு விடயத்தில் சீனா தொடர்ந்தும் கைவிரித்து வருகிறது. இந்த நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தொலைபேசி அழைப்புக்குக்கூட சீனத் தலைவர் பதிலளிக்காது தவிர்த்து வருகிறார் என்று ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகள் மிகவும் முக்கியமான கட்டத்தில் தற்போதுள்ளன. இரு வாரங்களுக்கு முன்னர், சீனாவின் எக்சிம் வங்கி , இலங் கையின் கடனை இரு வருடங்களுக்கு மறுசீரமைக்க இணக்கம் தெரிவித்து ஐ. எம். எவ்வுக்கு கடிதம் அனுப்பியது.

இந்த நிலையில், சீனாவிடம் இருந்து இலங்கைக்கு கடன் நிவாரணம் வழங் கப்பட வேண்டும். ஆனால், ஐ. எம். எவ்வின் கடிதத்துக்கு சீனா இதுவரை பதிலளிக்கவில்லை.

இது தொடர்பில் சீன

15

## இந்திய பிரதமரை ரணில் சில தினங்களில் சந்திப்பார்!

கொழும்பு, பெப். 20

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்னும் சில தினங்களில் சந்தித்துப் பேசுவார் என்று தெரியவருகின்றது.

இலங்கையின் ஜனாதிபதி முதல் பயணத்தை இந்தியாவுக்கு மேற்கொள்வதே சம்பிரதாயமாக இருந்து வருகிறது. ஆனால், ஜனாதிபதியாக பதவியேற்ற நாள் முதல் இந்தியாவுக்கு சென்று பிரதமர் மோடியை சந்திப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க முயன்று வருகிறார். அவருக்கு அதற்கான வாய்ப்பு வழங்கப்படவில்லை.

இந்நிலையில், பல வழிகளில் மோடியை

15

## இரவு 7 மணிக்கு விளக்குகளை அணைத்து போராட அழைப்பு!

கொழும்பு, பெப். 20

மின்சார கட்டண உயர்வுக்கு எதிராக இன்று திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு அனைத்து மின்விளக்குகளையும் அணைக்குமாறு மக்கள் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய இயக்கம் பொது மக்களை கேட்டுள்ளது.

இது தொடர்பில் மக்கள் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய இயக்கத்தின் அழைப்பாளர் அனுருத்த சோமதுங்க கருத்து தெரிவிக்கையில்,

"நாளை (இன்று) இரவு 7

15

## ஜனாதிபதிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் கண்ணீர் புகை, தண்ணீர் பிரயோகம்!

### 6 பல்கலைக்கழக மாணவர்கள் கைது



கண்டி, பெப். 20

ஜனாதிபதிக்கு எதிர்ப்பு தெரிவித்து கண்டியில் நேற்று மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தை கண்ணீர் புகைக்குண்டு வீசியும் தண்ணீர் தாரை பிரயோகம் செய்தும் பொலிஸார் கலைத்தனர்.

கண்டியில் சுதந்திர தின விழா கொண்டாட்டத்துக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சென்றுள்ளார். அவரின் வருகையை எதிர்த்து நேற்று களனி பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இதனைக் கலைக்க பொலிஸார் கண்ணீர் புகை குண்டுகளை வீசியதுடன், தண்ணீர் தாரை பிரயோகத்தை யும் மேற்கொண்டனர். இதைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் கலைக்கப்பட்டது. இதையடுத்து 4 பிக்கு மாணவர்கள் உட்பட 6 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## மகிந்தவுக்கு பிரதமர் பதவி விலக மறுக்கிறார் தினேஷ்

கொழும்பு, பெப். 20

முன்னாள் பிரதமரான மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் பிரதமராக்கும் முயற்சியில் அந்தக் கட்சியின் மூத்த தலைவர்கள் செயல்படுகின்றனர் என்று கடந்த வாரத்தில் தகவல்கள் வெளியாகின. இந்த நிலையில், ஆனால், இது விடயத்தில் அவருக்கு இடம்விடாமல் பிரதமர் தினேஷ் குணவர்த்தன மறுத்து வருகிறார் என்று கூறப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் அறிய வருபவை வருமாறு,

பொதுஜன பெரமுன கட்சி வலுவான நிலையை எட்ட வேண்டுமானால்,

15

## உள்ளூராட்சி தேர்தல் குறித்து புதன்கிழமை அறிவிக்கப்படும்!

### தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, பெப். 20

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்கெடுப்புக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள திறைசேரி நிதி வழங்குவதை தாமதப்படுத்துவதால் வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றுவதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதை உயர் நீதிமன்றத்துக்கு அறிவிக்க தீர்மானித்துள்ளோம்.

தேர்தல் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பை நாளை மறுதினம் புதன்கிழமை வெளியிட எதிர்பார்த்துள்ளோம் என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அத்துடன், அரசமைப்பின் பிரகாரம், எதிர்வரும் மார்ச் 9ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத்

15

## யாழ். போதனா மருத்துவமனையில் மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு!

யாழ்ப்பாணம், பெப். 20

யாழ்.போதனா மருத்துவமனையில் பல மாதங்களாக மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று அதன் பிரதிப் பணிப் பாளர் மருத்துவர் சி. யமுனானந்தா தெரிவித்துள்ளார்.

மருந்து தட்டுப்பாடு தொடர்பில் நேற்று செய்தியாளர்களுக்குக் கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், ஆய்வுகூடங்களுக்கான இரசாயனங்களுக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

தமிழ் தேசிய கூட்டமைப்பு
X
TNA
கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

## இப்படியும் நடக்கிறது...!

தமிழரசுக் கட்சி கூட்டமைப்பிலிருந்து தனித்துப் போன பின்னரும் - இப்போதும் தேர்தல் பிரசார சுவரொட்டிகளில் தங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று பிரசாரம் செய்வது பற்றி நேற்றைய தினம் இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

அதனைப் படித்துவிட்டு நண்பர் ஒருவர் சற்றுக் கோபமாகவே ஒரு குறிப்பை அனுப்பியிருந்தார்.

அவருக்கு இந்தப் பத்தியில் தொடர்ந்து தமிழரசு கட்சியை விமர்சனம் செய்வது 'கடுப்பை' ஏற்படுத்தியிருப்பது எனக்கு முன்னரே தெரிந்திருந்தது.

தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிடுவது என்று தனது மத்திய குழுக்கூட்டத்தில் முடிவெடுத்திருந்தாலும் அதனை அடுத்து நடந்த கூட்டமைப்பின் தலைவர்களுடனான ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்திலேயே இறுதிசெய்திருந்தது.

சம்பந்தனின் இல்லத்தில் இறுதியாக நடந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திலேயே தாம் தனியாகப் பிரிந்து செல்லும் முடிவை அறிவித்தது தமிழரசு கட்சி. அதே கூட்டத்தில் வைத்து, 'இனிமேல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரைப் பங்காளிக் கட்சிகள் யாரும் பாவிப்பதில்லை' என்றும் ஒரு முடிவு எடுக்கப்பட்டதாக சுமந்திரன் தெரிவித்து வருவதை எழுதியிருந்த அந்த நண்பர், அப்படி ஒப்புக்கொண்ட பின்னர் பங்காளிக் கட்சிகள் அந்தப் பெயரை பயன்படுத்துவது தவறுதானே என்று கேட்டிருந்தார்.

அதுகுறித்து அப்போதே பங்காளிக் கட்சி தலைவர் ஒருவருடன் பேசியபோது அவர், அது உண்மையற்ற புனைகதை என்பதைத் தெளிவுபடுத்தியிருந்ததுடன், அப்படி தமிழரசு முடிவெடுத்த பின்னர், சம்பந்தன் பங்காளிக் கட்சிகளிடம் 'அப்ப கூட்டமைப்பிலிருந்து தமிழரசை வெளிய விடுகிறியள்' என்று கூறியிருந்ததையும் நினைவு படுத்தினார்.

அப்படி கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் எதுவும் அந்தப் பெயரைப் பயன் படுத்துவது இல்லை என்று தீர்மானித்திருந்தால், ஐயோ பாவம்! தனது கட்சிக்காரர்களே 'தமிழ்த் தேசிய கூட்டமைப்பு' என்ற பெயரில் தமிழரசு கட்சியின் சுவரொட்டிகளை ஒட்டித்திரிவது அவருக்குத் தெரியாதுபோல உள்ளதே. அல்லது இவ்வாறு மக்களை ஏமாற்றும் அரசியலை ஒரு தொழிலாக நுட்பத்தோடு தமிழரசு கட்சி முன்னெடுக்கும் என்பதைத்தான் - புதிய 'தொழில்நுட்ப உத்தியோடு' தேர்தலைச் சந்திக்கப் போவதாக அவர் முன்னரே அறிவித்தாரோ என்னவோ.

நமது தமிழ்த் தேசியக் கட்சிகள் இப்படி அடிபட்டுக் கொண்டிருக்க, உள்ளூராட்சி தேர்தல் எதிர்பார்த்தபடி மார்ச் ஒன்பதாம் திகதி நடைபெறுவது பெரும்பாலும் கேள்விக்குறி ஆகியிருக்கிறது.

இந்த நேரத்தில் அந்தத் தேர்தலை நடத்தாமல் அரசு மக்களின் ஜனநாயக உரிமையை கேள்விக்குறியாக்கி இருக்கின்றது என்ற ஓலம் இப்போது எதிர்க்கட்சிகளிடமிருந்து பலமாகக் கேட்கின்றது.

உள்ளூராட்சி தேர்தலை நடத்தாமல் இழுத்தடிப்பது மக்களின் ஜனநாயக உரிமையில் கைவைக்கின்ற செயல்தான். அதில் கேள்விக்கு இடமில்லை. ஆனால், இந்த மாகாண சபைகளுக்கும் நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக தேர்தல்களே நடைபெறாமல் இருப்பது எந்த மீறல்களுக்குள் வரும் என்பதையும் நமது அரசியல் கட்சிகள் தெளிவு படுத்தவேண்டும்.

மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படுமானால், மற்றைய தேர்தல்களைப் போல ஒட்டுமொத்தமாக நாடு முழுவதும் நடத்தவேண்டிய தேவையும் இருந்திருக்காது.

இந்த உள்ளூராட்சி தேர்தலுக்கு பதிலாக மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவதற்கு தேர்தல் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தால் ஒவ்வொரு மாகாண சபைக்கும் தனித்தனியாக தேர்தல் நடத்த முடிந்திருக்கும். அப்படி நடத்துகின்ற போது அதற்கான நிதியையும் கொஞ்சம் கொஞ்சமாகப் பெற்று தேர்தலை நடத்தியிருக்கலாம்.

இனியாவது தேர்தல் நடத்தவேண்டும் என்று கோஷம் போடுகின்றவர்கள் மாகாண சபைக்கான தேர்தலை நடத்தவேண்டும் என்று கோரிக்கையை விடுக்க வேண்டும்.!

- ஊர்க்குருவி

# மத்தளவின் வருமானத்தைவிட செலவுகள் 21 மடங்கு அதிகம்!

கொழும்பு, பெப். 20

மத்தள சர்வதேச விமான நிலையத்தின் செயல்பாட்டு செலவுகள் அதன் வருமானத்தை விட 21 மடங்கு அதிகமென தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளிப்படுத்தியுள்ளது.

வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் 2021ஆம் ஆண்டறிக்கை தொடர்பான ஆய்வறிக்கையை முன்வைத்து தேசிய கணக்காய்வு அலுவலகம் இதனைத் தெரிவித்துள்ளது.

2017 முதல் 2021ஆம் ஆண்டு வரை மத்தளை சர்வதேச விமான நிலையத்தின் நிகர நஷ்டம் 2ஆயிரத்து 59 கோடி ரூபாயாகும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்தள சர்வதேச விமான நிலையத்தின் எதிர்பார்க்கப்பட்ட வருடாந்த பயணிகளின் எண்ணிக்கை 10 இலட்சமாகும். ஆனால், கடந்த 5 வருடங்களுக்குள் 91 ஆயிரத்து 747 பயணிகள் மாத்திரமே இதனூடாக பயணித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான காரணங்களால் மத்தள சர்வதேச விமான நிலையத்தின் கட்டுமானத்துக்காக பயன்படுத்தப்பட்ட நிதி வினைத்திறனான முறையில் பயன்படுத்தப்படவில்லை என தேசிய கணக்காய்வு அலுவலகம் அதன் ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

இதனிடையே, இரத்மலானை விமான நிலையமும் தொடர்ச்சியாக நஷ்டத்தை சந்தித்து வருவதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2017 முதல் 2021ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்குள் இந்த விமான நிலையத்தின் ஊடாக 169. 3 கோடி ரூபாய்க்கும் அதிக நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அத்தியாவசிய மருந்துகளுக்கு கட்டுப்பாட்டு விலை வருகிறது!

கொழும்பு, பெப். 20

தெரிவு செய்யப்பட்ட சில அத்தியாவசிய மருந்துகளுக்கு கட்டுப்பாட்டு விலையை அறிமுகப்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அதற்காக விசேட மருத்துவ நிபுணர்கள் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பான அறிக்கையை இரு வாரங்களுக்குள் ஒப்படைக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

நீரிழிவு நோய், இருதய நோய் உள்ளிட்ட அத்தியாவசிய மருந்துகளுக்கே இவ்வாறு கட்டுப்பாட்டு விலை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

சந்தையில் மருந்து பொருட்களின் விலைகள் தொடர்ச்சியாக அதிகரித்து வருவதை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (ஐ)

# மாட்டு கன்றை வெட்டி தலையை வீதியில் வீசிச்சென்ற விஷமிகள்!

யாழ்ப்பாணம், பெப். 20

சிவராத்திரி தினமான நேற்று முன்தினம் மாட்டுக் கன்று ஒன்றை வெட்டி அதன் தலையையும் இறைச்சி கழிவுகளையும் கோண்டாவில் முத்தட்டு வீதியில் விஷமிகள் வீசிச் சென்றுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக அப்பகுதி மக்களால் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்ததுடன், நல்லூர் பிரதேச சபை கழிவகற்றும் வாகனத்தின் ஊடாக கன்றின் இறைச்சி கழிவுகளை அங்கிருந்து அகற்றினர்.

இந்துக்களின் புனித விரதங்களில் ஒன்றான சிவராத்திரி விரத நாளன்று மாட்டுக் கன்றை வெட்டி அதன் தலையை வீசி சென்றமை அப்பகுதி மக்களிடம் கவலையை ஏற்படுத்தி இருந்தது.

விஷமிகளின் இந்த செயல்பாட்டுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொலிஸாரிடம் அவர்கள் கோரியுள்ளனர். (ஐ)

# தேர்தல் ஒத்திவைப்பை கண்டித்து பாராளுமன்றில் நாளை போராட்டம்

கொழும்பு, பெப். 20

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுவதற்கு எதிராக பாராளுமன்றத்தில் எதிர்ப்பு போராட்டத்தை நடத்த ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

பாராளுமன்றம் நாளை செவ்வாய்க்கிழமை கூடுகின்றது. இதன்போதே எதிர்ப்பு போராட்டத்தை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனால் இந்த வாரம் பாராளுமன்றம் சூடு பிடிக்கும் என எதிர்பாக்கப்படுகிறது.

இதேவேளை, உள்ளூராட்சி மன்ற தேர்தலை பிற்போடுதல், மின்சார கட்டண அதிகரிப்பு உட்பட பல பிரச்னைகள் எழுந்துள்ளதால், இதுதொடர்பாக கலந்துரையாடுவதற்கு பாராளுமன்றத்தை விரைவாகக் கூட்டுமாறு சுதந்திர மக்கள் கூட்டணி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி கட்சிகளின் 35 பாராளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகர் மற்றும் பிரதமருக்கு ஏற்கனவே கடிதம் அனுப்பி கோரிக்கை விடுத்திருந்தனர்.

என்றாலும் பாராளுமன்றம் 21ஆம் திகதி கூடுவதற்கு ஏற்கனவே தீர்மானித்திருப்பதால், அவசரமாக கூடவேண்டி ஏற்படாது என அரசாங்கத்தின் உயர் அதிகாரி முன்னர் குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை, உள்ளூராட்சிமன்ற தேர்தல் பிற்போடும் நிலை மற்றும் மின்சார கட்டணம் அதிகரிப்பு போன்றவை காரணமாக எவ்வேளையும் மக்கள் போராட்டங்கள் இடம்பெறுவதைத் தடுப்பதற்காக பாராளுமன்றம் மற்றும் அதனை அண்டியுள்ள பிரதேசங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
20.02.2023 திங்கட்கிழமை
பிலவ வருடம், மாசி 08

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# முன்னணியிடமுள்ள மாற்று வழியென்ன?

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியாக அடையாளப்படுத்தப்படும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவ்வப்போது சர்வதேச அரசியல் பற்றிப் பேசிக்கொள்ளும் ஒருவர். குறிப்பாக, இந்தியா தொடர்பில் அவ்வப்போது புரிந்தோ - புரியாமலோ பேசிவரும் ஒருவர். தங்களை தவிர, ஏனையவர்கள் அனைவர்மீதும் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதிலும் குறிப்பாக மற்றவர்களை இந்தியாவின் கைக்கூலிகள், முகவர்களென்று கூறுவதிலும் அலாதிப் பிரியமுள்ள ஒருவர்.

அவர் இப்போது, இலங்கையில் பாரிய விடயங்கள் மிகவும் இரகசியமான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று கூறுகின்றார். அந்த விடயங்கள் என்னவென்று அவர் கூறவில்லை. மக்களுக்கு உண்மைகளை கூறுபவர்களே நேர்மையான அரசியல்வாதிகள். ஒருவேளை, நாட்டில் இடம்பெறும் பாரிய விடயங்கள் தொடர்பில் கஜேந்திரகுமாருக்கு தெரிந்தால், அதனை அவர் மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். தனது அரசியல் நேர்மையை வெளிப்படுத்த வேண்டும்.

அண்மையில், அமெரிக்க பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரியின் கீழ், இரண்டு விமானங்களில் அமெரிக்க பாதுகாப்பு குழுவொன்று கொழும்புக்கு விஜயம் செய்திருந்தது. இதனை அடிப்படையாகக் கொண்டே பாரிய விடயங்கள் இரகசியமாக இடம்பெறுகின்றன என்று பொன்னம்பலம் கூற முயற்சிக்கின்றார். இவ்வாறான கதைகளை தென்னிலங்கையிலுள்ள சில சிங்கள அடிப்படைவாதிகளும் கூறிவருகின்றனர். ஒரு நாட்டில், இவ்வாறான உத்தியோகபூர்வமான விஜயங்கள் இடம்பெறுகின்றமைசாதாரணமான ஒன்றாகும். ஒரு வேளை அமெரிக்கா இரகசியமான விடயங்களை முன்னெடுக்க முயற்சிக்குமாயின், அவற்றை, இவ்வாறான வெளிப்படையான நகர்வுகளின் மூலம் மேற்கொள்ளவேண்டியதில்லை. அமெரிக்கா போன்ற ஓர் உலகசக்திக்கு விடயங்களை கையாளுவதற்கு பல வழிகளுண்டு.

இலங்கையின் மூலோபாய முக்கியத்துவம் முன்னரைவிடவும் அதிக கவனத்தை பெற்றிருக்கின்றது என்பது உண்மைதான். அதனை மறுப்பதற்கில்லை. இந்தப் பின்புலத்தில், அமெரிக்க இந்திய நகர்வுகளிலிருந்து இலங்கை தப்பிக்கவே முடியாது. உண்மையில், வெளித்தரப்புகளின் பிடியிலிருந்து சிங்களவர்களும் தப்ப முடியாது அதேவேளை தமிழர்களும் தப்ப முடியாது. ஒரு வேளை, இந்த யதார்த்தத்தை மறுதலிக்க பொன்னம்பலம் போன்றவர்கள் விரும்பினால், அதற்கான மாற்று வழிமுறைகளை கூறவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிப்பதற்கு பதிலாக, எங்களுக்கு வாக்களித்தால் நிலைமைகளை மாற்றியமைப்போமென் னும் பலவீனமான - உண்மைக்கு புறம்பான கதைகள் மூலம் இந்த அரசியலை ஒருபோதுமே எதிர்கொள்ள முடியாது. முதலில் வடக்கு - கிழக்கில் தமிழ்த் தேசியம் பேசுவதில் தங்களுக்குள் முட்டிமோதிக்கொள்ளும், கட்சிகளால் இந்திய மற்றும் அமெரிக்க நகர்வுகளில் ஒருபோதுமே குறுக்கீடு செய்ய முடியாது. இலங்கை அரசாங்கத்தினாலேயே எதுவும் முடியாதபோது, ஒரு சில பாராளுமன்ற ஆசனங்களை மட்டுமே வைத்திருக்கும் அகில இலங்கை காங்கிரஸ் போன்றதொரு கட்சியால் என்ன செய்துவிட முடியும்?

இலங்கைத் தீவில் இந்தியா மற்றும் அமெரிக்காவின் தலையீடுகள் தவிர்க்கவே முடியாதவை. இதனை ஆழமாகப் புரிந்துகொண்டால், இவற்றைத் தமிழர்கள் தங்களுக்கான வாய்ப்பாகவே நோக்க வேண்டும். மாறாக, பாரிய விடயங்கள் இரகசியமாக நடைபெறுகின்றன எனக்கூறி, மக்களை அச்சுறுதவதால் எவ்வித பயனுமில்லை. அமெரிக்கா இரகசியமாக விடயங்களை நகர்த்துவதை எதிர்க்க விரும்பினால், அதன் பொருள் என்ன? சீனாவை ஆதரிப்பதா?

# ஜனநாயகத்தை குழிதோண்டி புதைக்கும் செயலில் ஜனாதிபதி!

## சிறீதரன் எம். பி. சாடல்



கிளிநொச்சி, பெப். 20

ஜனநாயகத்தை குழி தோண்டிப் புதைக்கும் செயலில் ஜனாதிபதியே ஈடுபட்டுள்ளார். கட்சி மற்றும் பதவியைத் தக்க வைப்பது தொடர்பிலே பல வியூகங்களை ரணில் விக்கிரமசிங்க வகுக்கிறார் என்று பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற வேட்பாளர் அறிமுக நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர், "இந்த நாட்டின் ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைத்து ஜனநாயக ஆட்சி முறையை இல்லாது செய்வதற்கு, ஜனநாயகம் என்பதற்கு பல விளங்கங்களை சொல்லி போராட்டங்களை முன்னெடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே நடவடிக்கைகளை மேற்கொள்வது துர்ப்பாக்கியம்.

அவரை ஒரு லிபரல்வாதி என்றுதான் பலர் வெளியுலகிலே சொல்லுவார்கள். லிபரல் தன்மை கொண்ட அவர், இன்று ஜனநாயகத்தை மதிக்காத அல்லது ஜனநாயக முறைகளை ஏற்றுக் கொள்ளாதவராக உள்ளார். அவருடைய காலத்தில் பெரிய அநியாயங்கள் நடைபெறுவதற்கான கட்டியம்தான் தேர்தல் ஒத்திப்பு - தேர்தல் நிறுத்தப்படுவதற்கான நகர்வுகள்.

ஒரு நாடு பலமாக இருக்கின்றது என்றால் - அந்த நாட்டின் மக்கள் சுய பொருளாதார - அரசியல் முறைகளை சரியாக வழிநடத்துகின்றார்கள் என்றால், அந்த நாட்டில் ஜனநாயகம் இருக்கின்றது என்று அர்த்தம். ஆனால் அந்த ஜனநாயகம் இந்த நாட்டிலே இல்லை. அந்த ஜனநாயககத்தை இல்லாது செய்கின்ற பணிகளில் மிகப்பெரியளவில் ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். அவரோடு சேர்ந்த பலரும் அதற்காக உழைக்கிறார்கள் - என்றார். (ஐ)

# ஆணையாளர்களின் கீழ் உள்ளூராட்சி மன்றங்களை கொண்டுவரவேண்டும்!

கொழும்பு, பெப். 20

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடப்படுமாயின், தற்போதுள்ள சட்டத்துக்கு அமைய உள்ளூராட்சி மன்றங்களை ஆணையாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும் என உள்ளூாராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

340 உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளின் பதவிக்காலங்களும் எதிர்வரும் மார்ச் 19ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவடையவுள்ளது.

இந்த நிலையில், உள்ளூராட்சி மன்றங்களின் பொது நலனை பேணுவதற்கு எடுக்கப்படும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து இரு வாரங்களுக்குள் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு அமைச்சின் சட்டப் பிரிவுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

மக்கள் பிரதிநிதிகள் இன்றி உள்ளூராட்சி நிறுவனங்களை நடத்துவதற்கு அமைச்சு இணங்குவதில்லை எனவும் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# உருத்திரபுரம் குடும்பஸ்தர் கொலை: மூன்றாவது சந்தேக நபரும் கைது!

கிளிநொச்சி, பெப். 20

உருத்திரபுரம் பகுதியில் ஒருவர் வெட்டி படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.


உருத்திரபுரம் - சிவநகர் பகுதியில் கடந்த 13ஆம் திகதி மரண வீடொன்றில் இரு தரப்பினரிடையே ஏற்பட்ட முரண்பாடு வாள் வெட்டில் முடிந்தது.

இதில் சிவநகர் பகுதியை சேர்ந்த 44 வயதான சண்முகசுந்தரம் யசோதரன் என்ற நான்கு பிள்ளைகளின் தந்தை உயிரிழந்தார். நால்வர் காயமடைந்திருந்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று கருதப்படும் இருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.

இந்நிலையிலேயே நேற்று முன்தினம் ஒருவர் கைது செய்யப்பட்டு நேற்று கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை நீதிமன்றில் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'





# இன்றைய ராசிபலன்

பெப்ரவரி - 20 திங்கட்கிழமை
சுபகிருது வருடம் - மாசி 08
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : திதித்துவயம்

**மேடம்**
முன்னோர் வழிபாடு நலம் தரும். எதிர்பார்த்த வருவாய் வந்து சேரும். நேற்றைய முயற்சி ஒன்று நிறைவேறும். நிதிநிலை உயரும். நீங்கள் எதிர்பார்த்த தகவல் வந்து சேரும்.

**இடபம்**
வருவாயில் இருந்து வந்த தடை விலகும். ஈடுபடும் செயலில் லாபம் காண்பீர்கள். வேகமுடன் செயல்பட்டு திட்டமிட்ட செயலை செய்து முடிப்பீர்கள். உங்கள் முயற்சி வெற்றியாகும்.

**மிதுனம்**
அலைச்சல் அதிகரிக்கும். வருமானத்தில் தடை உண்டாகும். உத்தியோகத்தில் எதிர்ப்பு குறையும். செயலில் கவனம் தேவை. திடீர் பயணம் ஏற்படும். உங்கள் எதிர்பார்ப்பு இழுபறியாகும் நாள்.

**கடகம்**
வாழ்க்கைத் துணையின் உதவியுடன் தள்ளிப்போன நிகழ்ச்சியை நடத்த முயல்வீர்கள். நண்பர்களிடம்ஏற்பட்ட பிரச்னைகள் முடிவிற்கு வரும். எதிர்பார்த்த பணம் வரும். வழக்கு வெற்றியாகும்.

**சிம்மம்**
உங்கள் செல்வாக்கு இன்று வெளிப்படும். நேற்றைய பிரச்னை முடிவிற்கு வரும். மனதில் இருந்த குழப்பம் விலகும். துணிச்சலாக செயல்பட்டு நினைத்ததை அடைவீர்கள்.

**கன்னி**
நண்பர்கள் உதவியுடன் எதிர்ப்பு களை வெல்வீர்கள். முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள். எதிர்பாராத வருவாய் வந்து உங்கள் சங்கடத்தை நீக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**துலாம்**
உங்கள் மதிப்பு இன்று மற்றவர்களுக்கு தெரிய வரும். ஆசைகளுக்கு இடம் கொடுக்காமல் செயல்பட்டு முன்னேற்றம் காணும் நாள். முயற்சிக்கேற்ப வியாபாரத்தில் லாபம் காண்பீர்கள்.

**விருட்சிகம்**
உங்கள் நேற்றைய எண்ணம் ஒன்று நிறைவேறும். மகிழ்ச்சியான நாள். எதிர்பார்த்த பணம் வரும். கடன்களை அடைப்பீர்கள்.யோகமான நாள். உங்கள் செல்வாக்கு வெளிப்படும்.

**தனுசு**
பணம் நகைகளைக் கையாளுவதில் கவனம் தேவை. இழப்புகள் ஏற்பட வாய்ப்புண்டு. உங்கள் எண்ணம் நிறைவேறும். நண்பர்கள் உதவியால் லாபம் காண்பீர்கள்.

**மகரம்**
செயல்களில் கவனம் செலுத்த முடியாத நிலை உண்டாகும். எதிர்பார்ப்புகள் குறையும். நினைத்ததை அடைய வேண்டு மென்று துணிச்சலுடன் செயல்படுவீர்கள்.

**கும்பம்**
குடும்பத்திற்காக செலவு அதிகரிக்கும். முயற்சிகளில் தடையும் தாமதமும் ஏற்படும். ஆடம்பர செலவு செய்து சங்கடத்திற்கு ஆளாவீர்கள். பணியின் காரணமாக அலைச்சல் அதிகரிக்கும்.

**மீனம்**
வர வேண்டிய பணம் வந்து சேரும். உங்களை விட்டு விலகிச்சென்றவர்கள் மீண்டும் வருவார்கள். செல் வாக்கு உயரும். முன்னோரை வழிபட்டு ஒரு செயலில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள்.

# ‘நீட்’ பரீட்சைக்கு எதிராக உயர்நீதிமன்றில் வழக்கு!

## தமிழ்நாடு அரசு தாக்கல்

சென்னை, பெப். 20

மத்திய அரசு கொண்டு வந்த நீட் தேர்வுக்கு தமிழகத்தில் கடும் எதிர்ப்பு நிலவி வந்தது. இதனால் நீட் தேர்வுக்கு தடை கோரி நீண்ட நாட்களாக பல போராட்டங்கள் நடத்தப்பட்டன. இதையடுத்து, நீட் தேர்வில் இருந்து விலக்கு கோரி 2021ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டசபையில் ஒருமனதாக தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்தை தமிழ்நாடு ஆளுநர் நீண்ட காலமாக கிடப்பில் வைத்திருந்து பின்னர் மீண்டும் தமிழ்நாடு அரசுக்கு திருப்பி அனுப்பினார்.

இதனையடுத்து 2-வது முறையாக தமிழ்நாடு சட்டசபையில் நீட் தேர்வுக்கு விலக்கு கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மீண்டும் ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதனை ஜனாதிபதி ஒப்புதலுக்காக அனுப்பி வைத்திருப்பதாக ஆளுநர் தெரிவித்தார்.

நீட் தேர்வு விலக்கு குறித்து ஏற்கனவே விளக்கம் கேட்டு மத்திய அரசு அனுப்பிய கடிதத்துக்கு தமிழ்நாடு அரசு விளக்கம் தந்த நிலையில், மீண்டும் விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பியது. அதற்கான விளக்கத்தையும் சட்ட வல்லுநர்களின் துணையுடன் தமிழக அரசு அனுப்பிவைத்தது.

இந்நிலையில், நீட் தேர்வை இரத்துசெய்ய வேண்டும் என்று கோரி உயர்நீதிமன்றில் தமிழ்நாடு அரசு புதியதாக மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது.

(ஐ)

# பாட்டாளி மக்கள் கட்சி முதல்வருடன் சந்திப்பு!



சென்னை, பெப். 20

வன்னியர்களுக்கான 10.5 சதவீத உள் இடஒதுக்கீட்டை இந்த கல்வி ஆண்டுக்குள் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு முதல்வர் ஸ்டாலினை சந்தித்து பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் அன்புமணி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் வன்னியர்களுக்கு 10.5 சதவீதம், சீர்மரபினருக்கு 2.5 சதவீதம், இதர பிற்படுத்தப்பட்டோருக்கு 7 சதவீதம் வழங்கப்பட்ட இடஒதுக்கீட்டை உச்ச நீதிமன்றம் கடந்த ஆண்டு மார்ச்சில் தடை செய்தது. வன்னியர் உள் இடஒதுக்கீடு தொடர்பாக இந்த ஆண்டு ஜனவரியில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு ஏற்ப, தமிழக அரசு அரசாணை வெளியிட்டது.

தமிழகத்தில் தலித் மற்றும் வன்னியர் சமூகத்தினர் 40 சதவீதம் உள்ளனர். வன்னியர் தனி இடஒதுக்கீட்டால் பிற சமூகங்களுக்கு பாதிப்பு கிடையாது. இது சீர்மரபினர் உட்பட யாருக்கும் எதிரானது கிடையாது.

போதைப் பொருட்களை கட்டுப்படுத்துவதில் முதல்வர் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியர், காவலர்களுடன் முதல்வர் மாதாந்திர கூட்டம் நடத்த வேண்டும் என வலியுறுத்தினோம் - என்றும் கூறினார்.

# நகைச்சுவை நடிகர் மயில்சாமி காலமானார்!



சென்னை, பெப். 20

பிரபல நடிகர் மயில்சாமி திடீர் உடல்நலக்குறைவால் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலமானார். அவருக்கு வயது 57.

தமிழ் திரையுலகின் பிரபல நகைச்சுவை நடிகர் மயில்சாமி. ஈரோடு - சத்தியமங்கலத்தில் பிறந்த இவர், முதன் முதலில் பல குரல் கலையால் பொது வெளியில் அறியப்பட்டார்.

1984இல் தமிழ் திரையுலகில் நுழைந்தார். அதுமுதல் சிறிய பெரிய வேடங்களில் நடித்து வந்தார். கமலின் அபூர்வ சகோதரர்கள், ரஜினியின் பணக்காரன் உட்பட எண்ணற்ற படங்களில் நடித்துள்ளார்.

2000ஆம் ஆண்டுக்கு பிறகு பலரும் அறியப்படும் நடிகராக பல படங்களில் நகைச்சுவை மற்றும் குணசித்திர வேடங்களில் நடித்தார். நடிகர் விவேக்குடன் இணைந்து நடித்த பல திரைப்படங்களில் நகைச்சுவை காட்சிகள் ரசிகர்களை கவர்ந்தன. நூற்றுக்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார்.

திரைப்படங்கள் மட்டுமின்றி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் தொகுத்து வழங்கி இருக்கிறார். சினிமாவை தாண்டி பொது நலன் தொடர்பான விசயங்களில் கவனம் செலுத்தி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

இதனிடையே, சென்னை சாலிகிராமத்தில் வசித்து வந்த இவர் உடல்நலக்குறைவால் நேற்று உயிரிழந்தார்.

மயில்சாமியின் இறப்பு தமிழ் திரையுலகில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இதேநேரம், அவரின் உடலுக்கு திரைப்பட நட்சத்திரங்கள் பலரும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

(ஐ)

# சீமானை கைது செய்ய கோரி சாலையை மறித்து போராட்டம்!

ஈரோடு, பெப். 20

நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமானை கைது செய்ய வலியுறுத்தி, ராஜாஜிபுரம் மக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் சில நாட்களுக்கு முன் பிரசாரம் மேற்கொண்ட நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் ஒரு குறிப்பிட்ட சமுதாயம் குறித்து பேசியதற்கு எதிர்ப்பு எழுந்தது.

இந்நிலையில், நேற்று பிரசாரத்தில் ஈடுபட்ட நாம் தமிழர் கடசியினரிடம் மக்கள் கேள்வி எழுப்பினர். மக்களுடன் தி. மு. கவினரும் இணைந்த நிலையில் அங்கு மோதல் ஏற்பட்டது. இதில் தலையிட்ட பொலிஸார் இரு பகுதியினரையும் கலைந்து செல்லச் செய்தனர்.

இந்நிலையில், சீமானை கைது செய்யுமாறு கோரி மக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

(ஐ)

# தமிழரசை ரெலோ விமர்சித்ததாலேயே தனித்து போட்டியிடும் முடிவை எடுத்தோம்!

## தமிழரசு கட்சியின் தலைவர்



கிளிநொச்சி, பெப். 20

ரெலோ கட்சியின் எம். பி. ஒருவர், தமிழரசு கட்சியை விபசார விடுதி எனக் குறிப்பிட்டார். இதனால் அதிருப்தி அடைந்தவர்கள் தனித்தனியாக போட்டியிட விரும்பினர். அதனாலேயே இந்த முடிவு எட்டப்பட்டது என்று தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

அந்தக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட சபைகளின் வேட்பாளர் அறிமுக நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், தேர்தல் நடக்குமா இல்லையா என்ற கேள்வி பலரிடமும் உள்ளது. இந்தத் தேர்தல் முறையானது பொருத்தமற்றது. நாங்கள் கடந்த முறை பாராளுமன்றத்தில் இந்தத் தேர்தல் முறையை எதிர்த்தோம். இந்த தேர்தல் முறையை சிறு திருத்தங்களுடன் மாற்றிய மைத்திருக்கலாம்.

இந்த தேர்தல் முறையால், 100 வாக்குகளைக்கூட பெறாதவர் தவிசாளராக இருக்கின்றார். வவுனியா நகர சபையில் இவ்வாறு இருக்கிறார். ஆட்சி அமைக்கக்கூடிய அதிகாரம் இருந்தாலும், எம்மால் ஆட்சியமைக்க முடியாத நிலை உள்ளது.

இந்த தேர்தலில் கூட்டமைப்பாக இல்லாமல் தனித் தனியாக போட்டியிட்டு சிறு வாக்குகளால் விகிதாசாரத்தில் வந்து ஆட்சி அமைப்பதை தவிர்க்கும் தந்திரமாக போட்டியிடுகிறோம். தேர்தலின் பின்னர் நாங்கள் கூட்டு சேர்ந்து ஆட்சி அமைப்பது தொடர்பில் முயற்சிப்போம். ஆட்சியமைப்பின் பின்னர் அனைத்து கட்சிகளையும் இணைத்து பயணிப்போம்.

இந்த முடிவுக்கு பங்காளி கட்சிகளும் உந்துதலாக இருந்தன. ரெலோ கட்சியின் எம். பி. ஒருவர், தமிழரசு கட்சியை விபசார விடுதி எனக் குறிப்பிட்டார். இதனால் அதிருப்தி அடைந்தவர்கள் தனித்தனியாக போட்டியிட விரும்பினர். அதனாலேயே இந்த முடிவு எட்டப்பட்டது.

அதனால் பாதிப்பும் உள்ளது. பேச்சுக்கள், போர்க்குற்ற விசாரணை உள்ளிட்ட விடயங்கள் முன்னெடுத்து வரும் நிலையில் பிளவுபடுவதால் பாதிப்படையும். ஆனாலும் இவ்வாறான விடயங்களை நாம் ஒன்றாகவே முன்னெடுப்போம். 3 கட்சிகள் போட்டியிட்டாலும் வீட்டு சின்னத்திலேயே வெற்றி பெற்றோம். தனித்துப் போட்டியிட முடிவெடுத்த பின்பும், இனப்பிரச்னை, நில விடுவிப்பு போன்ற விடயங்களை பேசுவதற்காக அனைவருமாக ஒன்றாகவே செயல்படுகிறோம் - என்றார். (ஐ)

# "வெளிநாடுகள் இலங்கையை சூறையாடும் நிலை உள்ளது"

யாழ்ப்பாணம், பெப். 20

அண்மையில், அமெரிக்காவின் இரு விமானங்கள் இலங்கை வந்து சென்றுள்ளன. இந்நிலையில், வெளிநாடுகள் தமது நலன்களை அடைவதற்காக இலங்கையை சூறையாடக் கூடிய சூழலே காணப்படுகிறது - என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வட்டுக்கோட்டை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு சுட்டிக்காட்டியிருந்தார்.

அண்மையில், இரண்டு விமானங்கள் இலங்கை வந்தன. ஆனால், அது தொடர்பாக ஊடகங்கள் அமெரிக்க தூதரகத்தை வினவியபோதும் அதற்குப் பதில் வழங்கப்படவில்லை. அமெரிக்காவின் தூதுக்குழு ஒன்று இலங்கைக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஆனாலும் ஒரு தூதுக்குழுவில் ஆகக்கூடுதலாக 25 பேர் உள்ளடங்கியிருந்தாலும் எதற்காக இவ்வாறு இரண்டு விமானங்கள் வருகை தந்தன என்பது தொடர்பாக சந்தேகம் நிலவுகிறது.

தற்போதைய அரசாங்கம் ஜனநாயக விரோத அரசாங்கம். இந்தத் திருட்டு அரசாங்கம் தொடர்ந்தும் ஆட்சியில் இருப்பதற்காக வெளிநாட்டு தரப்புக்கு சொத்துக்களை விற்கக்கூடிய நிலையிலேயே காணப்படுகிறது. எனவே, வெளிநாடுகள் தமது நலன்களை அடைவதற்காக இலங்கையை சூறையாடக்கூடிய சூழலே காணப்படுகிறது - என்றார். (ஐ)

# பிள்ளைகளின் பசியை போக்க முனைந்த தாயார் உயிரிழப்பு!

கொழும்பு, பெப். 20

பிள்ளைகளின் பசியைப் போக்குவதற்காக பலாப்பழம் பிடுங்குவதற்காக மரம் ஒன்றில் ஏறிய தாயார் தவறிவீழ்ந்து உயிரிழந்தார்.

கம்பளை - நாரங்விட்டையை சேர்ந்த 50 வயதுடைய சாந்தி குமாரி என்ற 4 பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்தார்.

அவருக்கு நான்கு மகள்கள் உள்ளனர், அவர்களில் மூவர் பாடசாலை செல்லும் வயதுடையவர்கள். அவரின், கணவர் தனியார் நிறுவனத்தில் கூலி வேலை செய்து வருகிறார்.

கணவன் சம்பாதிக்கும் வருமானம் குடும்பப் பராமரிப்புக்கு போதாததால் பாடசாலை பிள்ளைகளின் உணவு உள்ளிட்ட தேவைகளை பூர்த்தி செய்ய முடியாமல் அவர் சிரமப்பட்டு வந்துள்ளார்.

இந்த நிலையில், பிள்ளைகளின் உணவாக வழங்குவதற்காக பலாப்பழம் ஒன்றைப் பிடுங்குவதற்காக மரம் ஒன்றில் ஏறிய அவர் கீழே விழுந்தார்.

அவர் விழுந்த சத்தம் கேட்டு அங்கு வந்த பிள்ளைகள் தாயாரை அயலவர்களின் உதவியுடன் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

கம்பளை மருத்துவமனையில் கடந்த 5 நாட்களாக சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

# துப்பாக்கி சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, பெப். 20

காரில் வந்த இனந்தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 53 வயது நபர் ஒருவர் உயிரிழந்தார்.

அம்பாந்தோட்டை - வீரகெட்டிய, ஹகுருவெல பிரதேசத்தில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் உயிரிழந்தவரின் வீட்டின் முன்பாகவே இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# படை சேவையிலிருந்து தப்பியோடிய 30 ஆயிரம் பேர் சரணடையவில்லை!

கொழும்பு, பெப். 20

இராணுவ சேவையிலிருந்து தப்பியோடியவர்கள் மீண்டும் சேவையில் இணைவதற்காக பொது மன்னிப்பு வழங்கப்பட்ட போதிலும் முப்படையை சேர்ந்த மேலும் 30 ஆயிரம் பேர் இன்னும் சரணடையவில்லை என்பதை படைத் தரப்புகள் தெரிவித்தன.

பொது மன்னிப்பு காலத்தின் போது, ஆயுதப் படையிலிருந்து தப்பியோடிய 70 அதிகாரிகள் உட்பட 22,729 பேர் சரணடைந்தனர். இந்த வருடம் ஜனவரி 3ஆம் திகதி வரை 56 அதிகாரிகள் மற்றும் 20 ஆயிரத்து 116 சிப்பாய்கள் சரணடைந்தனர்.

கடற்படையிலிருந்து தப்பிச் சென்ற 2 அதிகாரிகளும் ஆயிரத்து 311 அதிகாரிகளும் விமானப் படையிலிருந்து தப்பியோடி 12 அதிகாரிகளும், 1232 அதிகாரிகளும் சரணடைந்தனர். (ஐ)

# தனக்குத் தானே தீ வைத்தவர் மனைவியையும் எரிக்க முயற்சி!

## பொலிஸ் நிலையத்தில் சம்பவம்

கொழும்பு, பெப். 20

தனக்குத் தானே தீ வைத்துக் கொண்டு மனைவியை கட்டிப் பிடித்து தற்கொலைக்கு முயன்றவரை பொலிஸார் காப்பாற்றினர்.

கொழும்பு - மிரிஹானை பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தீ மூட்டிய நபர் பலத்த காயங்களுக்கு உள்ளானார்.

இந்த நபர்மீது மனைவி முறைப்பாடளித்திருந்தார். இதனால் இருவரும் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தனர். இதன்போதே, மேற்படி விபரீதம் நடந்தது.

மிரிஹானை தலைமையகப் பொலிஸாரின் பல்வேறு முறைப்பாடுகள் பிரிவில், சந்தேகநபர், தனது உடலுக்கு தீ வைத்தவாறு அருகில் இருந்த தனது மனைவியைக் கட்டிப் பிடிக்க முற்பட்டார்.

அவரின் மனைவி பிரதான வாயிலுக்கு வெளியே ஓடிவந்து உயிரைக் காப்பாற்றினார்.

அதேநேரம், அங்கிருந்த பொலிஸார் தீ மூட்டியவாறு வந்தவரை பிடித்து தீயை அணைத்தனர். பின்னர் அவரை களுபோவிலை மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். (ஐ)

# ரூ. 25 இலட்சம் பொருட்களை திருடிய இருவர் கைதாகினர்!

கொழும்பு, பெப். 20

கொழும்பு - மொறட்டுவையில் பெரும் வணிக நிலையம் ஒன்றின் களஞ்சியசாலையில் இருந்து 25 இலட்சம் ரூபாய்க்கும் மேற்பட்ட பொருட்களை திருடிய அந்த நிலையத்தின் ஊழியர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் இருவரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் மின்சாதனப் பொருட்கள், ஆடைகள் மற்றும் பல்வேறு பொருட்களை திருடியுள்ளனர். இவ்வாறு திருடப்பட்ட பொருட்களின் மதிப்பு சுமார் 25 இலட்சம் ரூபாய் என்று கூறப்படுகின்றது.

முன்னதாக சந்தேக நபர்களில் ஒருவர் முச்சக்கரவண்டியில் வந்து களஞ்சியசாலையில் இருந்த பொருட்களை திருடிச் சென்ற சந்தர்ப்பத்தில் அதில், திருடப்பட்ட பொருட்கள் நிறைந்த பை ஒன்றை மறந்து விட்டுச்சென்றுள்ளார்.

இந்நிலையில், அந்தப் பையை பார்வையிட்ட நிறுவனத்தின் மற்றைய ஊழியர்கள் பிரதம அதிகாரிக்கு தெரியப்படுத்தினர். இதையடுத்து அங்கு பொருத்தப்பட்டிருந்த சி.சி.டி.வி பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பில் மொறட்டுவை பொலிஸில் முறைப்பாடு செய்தமைக்கு அமைவாக சந்தேக நபர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் 51 மற்றும் 45 வயதுடையவர்கள் எனவும் அவர்கள் நிகவெரட்டிய மற்றும் மிகிந்தலை பிரதேசங்களை சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் எனவும் அவர்கள் இதற்கு முன்னர் பல தடவைகள் கைதுசெய்யப்பட்டு, புனர்வாழ்வு தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டு புனர்வாழ்வு பெற்று, மீண்டும் விடுவிக்கப்பட்டவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# திருக்கேதீச்சரம் சிவராத்திரி விழா; ஏழு இலட்சம் பக்தர்கள் திரண்டனர்!



**மன்னார், பெப். 20**

**வரலாற்று பிரசித்தி பெற்றதும் பாடல் பெற்றதுமான மன்னார் திருக்கேதீச்சர ஆலயத்தின் சிவராத்திரி திருவிழாவில் 7 இலட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் பங்கேற்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.**

திருக்கேதீச்சர ஆலய சிவராத்திரி விழா நேற்று முன்தினம் அதிகாலை 5 மணி தொடக்கம் நடைபெற்றது.

இந்தத் திருவிழாவில், காலை 8.மணி தொடக்கம் மகாலிங்க பெருமானுக்கு தீர்த்தக் காவடி எடுக்கப்பட்டது.

அத்துடன், மாலை 3 மணி முதல் விசேட அபிஷேகமும் 4.30 மணிக்கு மகா பிரதோஷ கால பூசையும் இதனைத் தொடர்ந்து ஆறு சாமப்பூசை அபிஷேகங்களும் அர்ச்சனை வழிபாடுகளும் நடைபெற்று நேற்றுக் காலையும் விசேட பூசைகள் அபிஷேகங்கள் இடம்பெற்று மகேஸ்வர பூசையுடன் நிறைவடைந்தது.

இந்தத் திருவிழாவில் பங்கேற்றவர்களுக்காக விசேட போக்குவரத்து ஏற்பாடுகள், மற்றும் தாக சாந்தி மற்றும் பிற ஏற்பாடுகளை மன்னர் மாவட்ட செயலகம் தலைமையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் திடீரென தோன்றிய சிவலிங்கம்



வடமராட்சி, பெப். 20

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி - முடங்குதீவுப் பகுதியில் இனந்தெரியாத நபர்களால் சிவலிங்கம் ஒன்று பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு குறித்த சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், குறித்த பகுதி ஊடாகப் பயணிப்போர் வாகனங்களில் இருந்து இறங்கி சிவலிங்கத்துக்கு பூக்கள் வைத்து, கற்பூரம் கொளுத்தி, தேங்காய் உடைத்து வழிபட்டுச் செல்கின்றனர். (அ-02)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ரூ. 16,000 கொடுப்பனவு அமுல்!

## மீறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப். 20

வடக்கு மாகாண முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு தொழில் திணைக்கள சட்ட ஒழுங்கின் குறைந்தது 16 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று யாழ். மாவட்ட தொழில் திணைக்களம் வலியுறுத்தியுள்ளது.

இந்த வேதனத்தை வழங்குவதில் மெத்தனப்போக்கு முன்பள்ளி நிர்வாகங்களால் கடைப்பிடிக்கப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்மானித்துள்ளதாகவும் தொழில் திணைக்களம் அறிவித்துள்ளது.

பருத்தித்துறை கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட முன்பள்ளி நிர்வாகிகள், ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு கூட்டம் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில், தொழில் திணைக்கள அதிகாரிகளும் பங்கேற்றனர். இதில், முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கொடுப்பனவு விடயத்தில் இழைக்கப்படுகின்ற அநீதி தொடர்பில் தொழில் திணைக்களத்தினர் சுட்டிக்காட்டினர்.

தற்போது நடைமுறையில் உள்ள தொழில் திணைக்கள சட்டத்தின்படி, முன்பள்ளி ஆசிரியர் ஒருவருக்கு முன்பள்ளியை நடத்தும் நிர்வாகத்தால் மாதாந்தம் 16 ஆயிரம் ரூபாயை வழங்க வேண்டும். இதேநேரம் கல்வித் திணைக்களம் வழங்கும் 6 ஆயிரம் ரூபாயையும் சேர்த்து 22 ஆயிரம் ரூபாய் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படவேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இதேவேளை,

வழங்கப்படும் வேதனத்தின் 20 வீதம் ஊழியர் சேம லாப நிதிப் பங்களிப்பும், 3வீதம் ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்பும் வழங்கப்படவேண்டும் என்றும் தொழில் திணைக்களத்தினர் சுட்டிக் காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஏ-9 வீதியில் விபத்து; சிறுமி உயிரிழப்பு!

வவுனியா, பெப். 20

ஏ-9 வீதி, வவுனியா - பூனாவ பகுதியில் இடம்பெற்ற விபத்தில் சிறுமி ஒருவர் உயிரிழந்தார். இருவர் படுகாயமடைந்தனர்.

சிறுமியும் தாயாரும் நடந்து சென்றுகொண்டிருந்தனர். அச்சமயம், வீதியில் வந்த காரின் குறுக்கே நாய் புகுந்தது. விபத்தைக் கட்டுப்படுத்த சடுதியாக முனைந்தபோது நடந்து சென்றவர்களின் மீது கார் மோதியது.

இதில், 13 வயது சிறுமி உயிரிழந்தார். தாயும் காரின் சாரதியும் படுகாயமடைந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# நல்லூரில் வாள்வெட்டு இரு இளைஞர்கள் காயம்

யாழ்ப்பாணம், பெப். 20

நல்லூரில் இடம்பெற்ற வாள்வெட்டில் இரு இளைஞர்கள் காயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன், அவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# பேராசிரியர் விக்னேஸ்வரனுக்கு யாழ். பல்கலையில் நாளை அஞ்சலி!

யாழ்ப்பாணம், பெப். 20

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக கணிதத்துறை பேராசிரியரும், முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் இரட்ணம் விக்னேஸ்வரனின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் 21ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

கோண்டாவில் வடக்கிலுள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள அவரது பூதவுடல் செவ்வாய்க்கிழமை காலை 7:30 மணிக்கு அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, பல்கலைக்கழகத்தில் அஞ்சலிக்கு வைக்கப்படும்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெறவுள்ள அஞ்சலி நிகழ்வைத் தொடர்ந்து, முற்பகல் 9:30 மணிக்கு பூதவுடல் மீண்டும் அவரின் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு முற்பகல் 10:30 மணிக்கு இறுதிக் கிரியைகள் நடாத்தப்பட்ட பின்னர் தகனக் கிரியைகளுக்காக இணுவில் கிழக்கு, காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# குழாய் நீர் கட்டணமும் அதிகரிக்கிறது

## ஜீவன் தொண்டமான்

கொழும்பு, பெப். 20

மின்சார கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், குழாய் நீர்க் கட்டணமும் அதிகரிக்கப்படும் என்று நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்துக்கு வேறு தெரிவுகள் இல்லை என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தலவாக்கலையில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை, நீர் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் இன்னும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# தமிழரசின் கிளிநொச்சி வேட்பாளர் அறிமுக நிகழ்வு நேற்று நடைபெற்றது!



கிளிநொச்சி, பெப். 20

இலங்கை தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வு நேற்று ஞாயிற்றுக் கிழமை கிளிநொச்சியில் உள்ள தமிழரசுக் கட்சியின் பணிமனையில் நடைபெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வு முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் குருகுலராஜா, வேட்பாளர்கள் மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள் பங்கேற்றனர். (ஐ)

# பாலைதீவு ஆலய திருவிழா; விசேட கலந்துரையாடல்

புனித பாலைதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த யாத்திரை உற்சவத்துக்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு யாத்திரீகர்களுக்கான விழாக் கால வியாபார நிலையங்களுக்கு அனுமதி வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் பூநகரி பிரதேச சபையால் நடத்தப்படவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல், எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு பூநகரி பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)

ஈழநாடு



# ஒரு வாரத்தில் மட்டும் 51 பேர் படுகொலை!

## வடக்கு, கிழக்கில் 7 பேர்

**கொழும்பு, பெப். 20**

**இலங்கையில் கடந்த ஒரு வாரத்தில் - 12ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரையான நாட்களில் மட்டும் 51 படுகொலைகள் பதிவாகியுள்ளன.**

பொலிஸாரின் உத்தியோகபூர்வ தகவல்களின் அடிப்படையில், கிழக்கு மாகாணத்தில் 4 பேரும், வடக்கு மாகாணத்தில் 3 பேரும் கொலை செய்யப்பட்டனர். மேலும், கொலையான 51 பேரில் 3 சிறுவர்கள், 8 பெண்களும் அடங்குவர்.

குடும்பத் தகராறு, தனிப்பட்ட தகராறு, காதல் விவகாரம், போதைப்பொருள் விற்பனை போட்டி மற்றும் கோஷ்டி மோதல்களால் இந்தக் கொலைச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

வட மேல் மாகாணத்தில் 12 பேரும், மேல் மாகாணத்தில் 9 பேர், தென் மாகாணத்தில் 7 பேர், மத்திய வட மத்திய மாகாணத்தில் 6 பேரும், ஊவா மாகாணத்தில் 5 பேரும், கிழக்கு மாகாணத்தில் 4 பேரும், வடக்கு மாகாணத்தில் 3 பேரும், மாகாணத்தில் 3 பேரும், சப்ரகமுவ மாகாணத்தில் 2 பேரும் படுகொலை செய்யப்பட்டனர். (ஐ)

# ஓ. எல். பரீட்சை விண்ணப்பம் 28இற்கு பின்னர் ஏற்கப்படாது!

கொழும்பு, பெப். 20

2022 (2023) க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 28ஆம் திகதிக்குப் பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்று பரீட்சைகள் திணைக்களம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

விண்ணப்பங்கள் தற்போது இணையவழி மூலம் மட்டுமே திணைக்களத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. 2023 கடந்த முதலாம் திகதி முதல் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

இதன்படி எதிர்வரும் 28ஆம் திகதி நள்ளிரவுக்கு பின்னர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, பாடசாலை விண்ணப்பதாரர்கள் அதிபர்கள் ஊடாக பரீட்சைக்கு விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், தனியார் விண்ணப்பதாரர்கள் தேவையான வழிகாட்டுதல்களை பின்பற்றி தாங்களாகவே விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

விண்ணப்பங்களை www. doenets.lk மற்றும் www. onlineexams.gov.lk/eic அல்லது பரீட்சை திணைக்களத்தின் 'Exams Sri Lanka' என்ற அலைபேசி செயலி ஊடாக சமர்ப்பிக்கலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# உக்கும் கழிவு பொருட்களிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம்!

## பிரதமர் ஆரம்பித்து வைக்கிறார்

கொழும்பு, பெப். 20

நாட்டில் முதன்முறையாக உக்கும் கழிவுகளிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்யும் செயல் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த செயல்திட்டத்தின் மூலம், நாளாந்தம் நாட்டின் தேசிய மின் உற்பத்தி கட்டமைப்பிற்கு 35 கிலோ வாட்ஸ் மின்சாரம் சேர்க்கப்படவுள்ளது.

இந்த செயல்பாட்டை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பிரதமர் தினேஷ் குணவர்த்தன மற்றும் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தலைமையில் கடுவலையிலுள்ள 'ரன்பலஸ்ஸ' கழிவு முகாமைத்துவ நிலையத்தில் நடைபெறவுள்ளது.

கடுவலை மாநகர சபையின் மேயர் புத்திக ஜயவிலாலின் எண்ணக்கருவின்படி ஆரம்பிக்கப்படவுள்ள இத்திட்டத்தில், சுமார் 10 தொன் உக்கும் குப்பைகளிலிருந்து உயிரியல் வாயு தயாரித்து அதிலிருந்து மின்சாரம் தயாரிப்பதே இந்த திட்டத்தின் முக்கிய பணியாகும்.

கடுவலை மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியிலிருந்து தினமும் சுமார் 100 தொன் குப்பைகள் சேகரிக்கப்படுகின்றன. இதிலிருந்து சுமார் 45 தொன் உக்கும் குப்பைகள் பிரிக்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# முன்னைய ஆட்சியாளரின் தவறாலேயே எமது நாடு நெருக்கடியில் தவிக்கின்றது!

## ரிஷாத் பதியுதீன் எம். பி. சாடல்

கொழும்பு, பெப். 20

முன்னைய ஆட்சியாளர்கள் விட்ட தவறுகளால்தான் அபிவிருத்தி உள்ளிட்ட அனைத்திலும் முன்னேற்றம் காண வேண்டிய எமது நாடு இன்று பொருளாதாரத்தில் பெரும் நெருக்கடியை சந்தித்துள்ளது - எனப் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

முந்தல் பகுதியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "சகல வளங்களையும் கொண்ட எமது நாட்டில் சுதந்திரம் கிடைத்த போது நாட்டின் ரூபாயின் பெறுமதி ஒரு டொலர் 4 ரூபாயாக இருந்தது. ஆனால் இன்று ஒரு டொலர் 400 ரூபாயாகக் காணப்படுகிறது. அந்தளவுக்கு எமது நாடு ரூபாயின் பெறுமதியை இழந்து கொண்டிருக்கிறது.

நாட்டின் பொருளாதாரம் வரலாற்றில் என்றுமில்லாதவாறு மிகவும் மோசமான முறையில் பாதிக்கப்பட்டுள்ளது. அனைத்திலும் முன்னேற்றம் காணவேண்டிய எமது நாடு இன்று கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கிவிட்டது.

கடந்த ஆட்சியாளர்கள் எமது நாட்டையும், நாட்டு மக்களை பற்றியும் ஒருபோதும் சிந்தித்தது கிடையாது. எப்படியாவது ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்பதற்காக இனங்களுக்கிடையில் பிளவுகளையும் பிரச்னைகளையும் ஏற்படுத்தினார்கள்.

இதன் விளைவுதான் எமது நாடு இவ்வளவு மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடியில் எப்படி வாழ்வது என்று தெரியாமல் மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இளைஞர்கள், யுவதிகள், பெண்கள் என பலர் தொழில் தேடி நாட்டைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

எனவே, இந்த விடயத்தில் தற்போதைய அரசாங்கம் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும். கடன் சுமையை மக்கள் மீது ஒருபோதும் திணிக்க முடியாது. இதற்கு மாற்று வழிகளை அரசாங்கம் கையாள வேண்டும் - என்றார். (ஐ)

# 150 மருந்துகளுக்கு தட்டுப்பாடு!

கொழும்பு, பெப். 20

அரச மருத்துவமனைகளில் பயன்படுத்தப்படும் சுமார் 150 வகையான மருந்துகளுக்கு தொடர்ந்தும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன், சுகாதார அமைச்சால் தேவையான பல மருந்து பொருட்களை கையிருப்பில் வைத்திருக்க முடியவில்லை. மருத்துவமனைகளில் நோயாளர் பராமரிப்பு சேவைகளை பேணுவதற்கும், நோயாளர் பராமரிப்பு சேவைகளை மக்களுக்கு வழங்குவதற்கும் இயலவில்லை என்றும் அந்த சங்கத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

# கோடீஸ்வரர் நடத்திய விபசார விடுதி முற்றுகை!

கொழும்பு, பெப். 20

வெளிநாடுகளிலிருந்து பெண்களை சுற்றுலா வீசாவில் இலங்கைக்கு அழைத்து வந்து விபசாரத்தில் ஈடுபடுத்தி பணம் சம்பாதித்த கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரின் சொகுசு விடுதி பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு மூவர் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது, இந்தோனேஷிய பெண் உட்பட இரண்டு பெண்களும் அதன் முகாமையாளரும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், அந்த விடுதியிலிருந்து குடும்பக் கட்டுப்பாட்டு மாத்திரைகள், பத்தாயிரம் ரூபாய் பணம் மற்றும் வங்கி பற்றுச்சீட்டுகள் என்பவையும் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# நாட்டை விட்டு வெளியேறும் மருத்துவர்கள் தொகை உயர்வு



## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, பெப். 20

பொருளாதார நெருக்கடிகள், அரசியல் குளறுபடிகள் மற்றும் அரசாங்கத்தின் நியாயமற்ற வரிக்கொள்கையால் நாட்டை விட்டு வெளியேறும் மருத்துவ நிபுணர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருகிறது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் சமில் விஜயசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

இந்த மாதத்தில் மாத்திரம் 50 முதல் 60 வரையிலான அரச மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். குறிப்பாக, சில மருத்துவர்கள் விடுமுறை பெறாமல் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

இருப்பினும், நாட்டை விட்டு வெளியேறிய மருத்துவ நிபுணர்களின் பெயர் விபரங்கள் மற்றும் அவர்களின் எண்ணிக்கைகளும் சுகாதார அமைச்சால் இதுவரையில் வெளியிடப்படவில்லை. எமக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருத்துவ நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

இதேவேளை, கிராம மட்டங்களில் உள்ள அரச மருத்துவமனைகள் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள மருத்துவமனைகளின் மருத்துவர்கள் வெளியேறுவதால் அந்த மருத்துவமனைகள் பெரும் பாதிப்புகளை சந்தித்துள்ளன.

இருப்பினும், கொழும்பு தேசிய மருத்துவமனை, லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனை மற்றும் மஹரகம புற்றுநோய் மருத்துவமனை இதுவரையில் மருத்துவ நிபுணர்களின் பற்றாக்குறையால் பாதிக்கப்படவில்லை.

மேலும், அங்கு விசேட மருத்துவ நிபுணர்கள் மருத்துவமனையில் காணப்பட்ட போதிலும் தாதியர்கள் மற்றும் ஏனைய சுகாதார ஊழியர்கள் மருத்துவமனைகளை விட்டு வெளியேறி வெளிநாடுகளில் தொழில் நிமித்தம் சென்றுள்ளனர்.

இதேவேளை, அதிகளவிலான மருத்துவ ஆலோசகர்களும் வெளியேறி வருகின்றனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் மற்றும் அரசியல் உறுதியின்மை, அரசின் வரிக்கொள்கைகளாலேயே மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர் என்றும் அந்த சங்கம் தெரிவித்துள்ளது. (ஐ)

# ‘அயலி’ கதை களவாடியதா? இலங்கை எழுத்தாளர் ஏன் அப்படி சொல்கிறார்? இயக்குநர் விளக்கம் என்ன?

சிவகுமார் ராஜகுலம்

தமிழில் வெளியாகி, நாடு முழுவதும் பரவலாக கவனம் ஈர்த்துள்ள அயலி இணையத் தொடரின் கதை தன்னுடையது என்று இலங்கைத் தமிழ் எழுத்தாளர் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியன் உரிமை கோரியுள்ளார். தன்னுடைய கதை களவாடப்பட்டுள்ளது என்பது அவரது குற்றச்சாட்டு. இதனை மறுத்துள்ள அயலி இயக்குநர் முத்துக்குமார், அயலி கதையை உருவாக்கியதன் பின்னணி குறித்து விளக்கம் அளித்துள்ளார்.

**‘அயலி” இணையத்தொடரின் கதை என்ன?**

கடவுள் நம்பிக்கை, சமூகப் பழக்கவழக்கம் என்பன போன்ற கட்டுகளை உடைத்து லட்சியத்தை நோக்கி நடைபோடும் பெண்ணை மையமாகக் கொண்ட அயலி தொடரின் கதை 1990 களில் நடப்பதாக அமைக்கப்பட்டுள்ளது. கிராமத்துப் பெண் ஒருத்தி வெளியூர் இளைஞருடன் காதல்வயப்பட்டு, உடன் போக்கு சென்றுவிட, சிறிது காலத்தில் அந்த ஊரே இயற்கையால் வஞ்சிக்கப்படுகிறது. இதனால் துரத்தப்பட்ட அவ்வூர் மக்கள் ஒட்டுமொத்தமாக அலைந்து, திரிந்து வேறோர் இடத்தில் குடிபெயர்கின்றனர்.

அங்கு பெண் தேவதை அயலிக்கு கோயில் கட்டும் அந்த மக்கள், தங்களது மோசமான நிலைக்கு கிராமத்துப் பெண்ணின் காதல் மணமே காரணம் என்று முடிவு கட்டி, அதற்கு பரிகாரமாக இனி மேல் தங்களது கிராமத்துப் பெண்கள் காதல்வயப்படாத வகையில் அவர்கள் பூப்பெய்த உடனேயே மணமுடிப்பதை வழக்கமாக்குகின்றனர். பூப்பெய்ததுமே மணமுடிக்க வசதியாக படிப்புக்கு பெற்றோர் முற்றுப்புள்ளி வைத்து விடுவதால், அந்த கிராமத்துப் பெண்கள் யாருமே எட்டாம் வகுப்பை தாண்டுவதே இல்லை. மருத்துவராக கனவு காணும் கதையின் நாயகி, அதற்காக வீடு, கிராமம், சமூகம் விதிக்கும் கட்டுப்பாடுகள், தடைகளை எவ்வாறு எதிர்கொண்டு சாதிக்கிறார் என்பதே அயலி தொடரின் கதை.

**‘அயலி” தொடரில் பெண்ணுரிமை கருத்துகள்**

பெண்ணை எப்போதும் கட்டுக்குள் வைத்திருக்க ஆணாதிக்க சமூகம் விதித்துள்ள கட்டுப்பாடுகளை சாடும் பெரியாரிய, அம்பேத்கரிய கருத்துகள் அயலி தொடர் முழுவதும் விரவிக் கிடக்கின்றன. ‘ஊர் கௌரவத்தை ஏன் பொம்பளை காலுக்கிடையிலே தேடுறீங்க?” என்பது போன்ற இந்த தொடரில் இடம் பெற்றுள்ள ஆணாதிக்க சமூகத்தை துளைக்கும் கேள்விகள் சமூக ஊடகங்களில் தொடர்ந்து எதிரொலித்துக் கொண்டிருக்கின்றன.

பெண் கல்வி, பெண் விடுதலை, குழந்தை திருமணம், சிறு வயது திருமணங்களால் நேரிடும் பிரசவ இறப்புகள் போன்றவற்றைப் பேசும் அயலி தொடர் குறித்து பெரும்பாலான பத்தி ரிகை, இணைய ஊடகங்கள் நேர்மறை விமர்சனங்களை முன் வைத்துள்ளன. படம் பேசும் கருத்தியலை அவை பாராட்டி யுள்ளன. அனைத்து தரப்பு மக்க ளிடையேயும் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ள அயலி தொடர் தெலுங்கு போன்ற பிற மொழிக ளிலும் மொழிமாற்றம் செய்யப் படுகிறது.

**‘அயலி” கதைக்கு உரிமை கோரும் இலங்கைத் தமிழ் எழுத்தாளர்**

அயலி தொடரும், அதில் பேசப்படும் பெண்ணுரிமை, பெண் விடுதலை கருத்துகளும் பேசுபபொருளாக மாறியுள்ள நிலையில், லண்டனில் வசிக்கும் இலங் கைத் தமிழ் பெண் எழுத்தாளரான ராஜே ஸ்வரி பாலசுப்பிரமணியன், அயலி கதை



தன்னுடையது என்று உரிமை கோரியுள்ளார். 70 வயதான அவர், இலங்கையில் பிறந்து, 1970-ம் ஆண்டு லண்டனில் குடியேறியவர்.

மருத்துவ மானுடவியலில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ள ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியன், எழுத்தாளர், பத்திரிகையாளர், மனித உரிமை ஆர்வலர், பட இயக்குநர் என பன்முகம் கொண்டவர். 19 புத்தகங்களை எழுதியுள்ள அவர், இலங்கையில் சிறந்த எழுத்தாளர் உள்ளிட்ட விருதுகளை வென்றவர். ‘தில்லையாற்றங்கரை” என்ற புதினத்திற்காக அவருக்கு சிறந்த எழுத்தாளர் விருது கிடைத்தது.

‘தில்லையாற்றங்கரை” புதினம் 1987-ம் ஆண்டு இந்தியாவில் பாரி பதிப்பகத்தால் முதன் முதலில் வெளியிடப்பட்டது. வாசகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்ற அந்த புதினம் 1998--ம் ஆண்டு மணிமேகலை பதிப்பகத்தாரால் மறுபதிப்பு செய்யப்பட்டது. ‘தில்லையாற்றங்கரை” புதினத்தின் கதை 1948-ம் ஆண்டு இலங்கை சுதந்திரம் மற்றும் 1960-களின் கால கட்டத்தில் நடக்கிறது.

இலங்கையின் கொந்தளிப்பான அரசியல் நடப்புகளுடன் அங்குள்ள கிராமத்தின் நிகழ்வுகளை பிணைத்து இந்த புதினம் புனையப்பட்டுள்ளது. பாரம்பரியம், சாதியம் மற்றும் பெண்களுக்கு எதிரான தளைகள் நிறைந்த அந்த கிராமத்தில் பிறந்த 3 பெண்களை நம் மனக்கண் முன் நிறுத்துகிறது இந்த புதினம்.

இந்த மரபுகள் எப்படி செயல்படுகின்றன? பெண்கள் இந்த அமைப்புக்கு எதிராக வெற்றிகரமாக போராட முடியுமா? இவர்களது எதிர்கால கனவுகள் என்ன ஆகும்? அவர்களுக்கு திருமணம் மகிழ்ச்சியா அல்லது பேரிடரா? என்பன போன்ற கேள்விகளை முன்னிறுத்தி அந்த புதினத்தின் கதையோட்டம் அமைந்துள்ளது.

லண்டனைச் சேர்ந்த கார்னார்ட் பதிப்பகம் ‘தில்லையாற்றங்கரை” புதினத்தை “The Banks of the river Thillai” என்ற பெயரில் 2021-ம் ஆண்டு மொழியாக்கம் செய்து வெளியிட்டது. புத்தக வெளியீட்டாளரான பீட்டர் எஸ். சாப்மேன், இலங்கைத் தமிழரின் சமூக கட்டமைப்பு, பெண்களின் நிலை, தமிழ் நாட்டு திராவிட அரசியல் இலங்கைத் தமிழரில் ஏற்படுத்திய தாக்கம், இலங்கையில் நடந்தேறிய அரசியல் மாற்றங்களால் தமிழர் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் போன்றவற்றை படம் பிடித்துக் காட்டும் இந்த புதினம் ஒரு வரலாற்றுப் பெட்டகம் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.


**தில்லையாற்றங்கரையை காப்பியடித்து அயலியாக்கி இருப்பதாக குற்றச்சாட்டு**

“அத்தகைய சிறப்பு வாய்ந்த தில்லையாற்றங்கரை புதினத்தையே என்னிடம் அனுமதி பெறாமல் அயலி இணையத் தொடராக எடுத்து வைத்திருக்கிறார்கள்” என்று குற்றம்சாட்டுகிறார் எழுத்தாளர் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்.

‘இலங்கையின் கிழக்கு கடற்கரையில் மட்டக்களப்பு அருகேயுள்ள கோளா கிராமம்தான் தில்லையாற்றங்கரை புதினத்தின் கதைக் களம். கவுரி, சாரதா, மரகதம் ஆகிய கதை மாந்தர்களை அடிப்படையாகக் கொண்டு நகரும் இந்த கதை, 1957-ம் ஆண்டு சாரதா பூப்படைவதில் இருந்து தொடங்குகிறது. அந்த கிராமத்தில் கண்ணகி கோயிலை மூலாதாரமாகக் கொண்டே பெண்களுக்கான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. பெண் கல்விக்கும், பெண் விடுதலைக்கும் வேலி போட்ட அந்த கட்டுப்பாடுகளை உடைத்து தங்களது கனவுகளை நோக்கி கதை மாந்தர்கள் எப்படி நடை போட்டார்கள் என்பதே புதினத்தின் கதை.” என் றார்.

**தில்லையாற்றங்கரை புதினத்தில் திராவிட அரசியலின் தாக்கம்**

அவர் மேலும் கூறும் போது, ‘இலங்கை சிங்கள பேரினவாத அரசியல் தலைதூக்கிய 1950-களின் பிற்பகுதியில், அதன் தாக்கம் தமிழரிடையே எப்படி இருந்தது என்பதையும் இந்த புதினம் விவரிக்கிறது. அந்த கால கட்டத்தில் தமிழ்நாட்டில் எழுச்சி பெற்ற திராவிட அரசியலின் தாக்கம் இலங்கைத் தமிழரி




டையே எப்படி இருந்தது என்பதும் இந்த நாவலில் காட்டப்பட்டுள்ளது. தில்லையாற்றங்கரை புதினத்தில் வரும் சின்னத்தம்பி என்ற கதாபாத்திரமும், ஆசிரியர் கதாபாத்திரமும் திராவிட கருத்துகளை பேசும். அண்ணா, கருணாநிதி ஆகியோரின் எழுத்துகளை யாருக்கும் தெரியாமல் படிப்பவராக சின்னத்தம்பி இருப்பார். பெரியார், அண்ணா, கருணாநிதி ஆகியோரின் கருத்துகள் இந்த புதினத்தில் எடுத்தாளப்பட்டிருக்கும்.” என்று கூறுகிறார்.

**‘கண்ணகி கோயிலை அயலி அம்மனாக மாற்றியுள்ளனர்”**

‘தில்லையாற்றங்கரை புதினத்தின் கதைதான் அப்படியே அயலி இணையத் தொடராக வெளிவந்திருக்கிறது. அது குறித்து நண்பர்கள் என்னிடம் கூறிய போது அதிர்ச்சியடைந்தேன். அதன் பிறகே அயலி இணையத் தொடரை நான் பார்த்தேன். என் புதினத்தில் உள்ள கண்ணகி கோயிலை அயலி கோயிலாக்கி இந்த தொடரை எடுத்திருக்கிறார்கள் என்பதை புரிந்து கொண்டேன். என் புதினத்தின் கதையையும், காட்சிகளையும் அப்படியே எடுத்துக் கொண்டு, பெயரையும், இடத்தையும் மட்டும் மாற்றி அயலி என்று இணையத் தொடராக்கி இருக்கி றார்கள்.” என்று அவர் கொந்தளித்தார்.

**‘அயலி’ குழு மீது விரைவில் சட்ட நடவடிக்கை - ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்**

‘The Banks of the river Thillai” புதினம் ஒரு ஹாலிவுட் படத்திற்கு உகந்த சிறந்த கதை என்று அதனைப் படித்த ஆங்கில எழுத்தாளர்கள் பலரும் பாராட்டினர். ஆனால், அந்த கதையை என்னிடம் கேட்காமலேயே, உரிய அனுமதி பெறாமலேயே இன்று அயலி இணையத் தொடராக எடுத்திருக் கிறார்கள் என்பதை என் னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இது குறித்து தமிழ்நாட்டில் உள்ள என் நண்பர்களான, எழுத்தாளர்களும், நலம் விரும்பிகளும் என்னிடம் பேசியிருக்கிறார்கள். என் புதினத்தை ஆங்கிலத் தில் பதிப்பித்த கான்ரார்ட் பிரஸ் பதிப்பகத்திடமும் இதுகுறித்து பேசியுள்ளேன். அயலி இணையத் தொடர் தயாரிப்புக் குழு மீது விரைவில் உரிய சட்ட நடவடிக்கை எடுப்பேன் “ என்றார் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் உறுதிபட.



**எழுத்தாளர் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்திற்கு தமிழ்நாட்டுடனான தொடர்பு**

இலங்கையில் மனித உரிமை மீறல் பிரச்னை, பெண்ணும் உடல் நலமும், பெண்ணும் எழுத்தும் ஆகிய தலைப்புகளில் சர்வதேச மாநாடுகளில் அவர் கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளார். இலங்கை, இந்தியா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் உள்ள பல்கலைக் கழகங்களில் இலக்கியம், அரசியல், பெண்ணுரிமை உள்ளிட்ட விவாதங்களில் அவர் பங்கேற்றுள்ளார். குறிப்பாக, தமிழ்நாட்டில் சென்னை பல்கலைக்கழகம், தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகம், பாரதியார் பல்கலைக் கழகம் மற்றும் பல கல்லூரிகளில் அவர் உரையாற்றியுள்ளார்.

1995-ம் ஆண்டுக்குப் பிறகு ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் எழுத்துகளை இலங்கையிலும், இந்தியாவிலும் பல மாணவர்கள் இளங்கலை, முதுகலை படிப்புகளுக்காக திறனாய்வு செய்துள்ளனர். தஞ்சை பல்கலைக் கழகத்தில் முனைவர் இராசு.பெவுன்துரை, பன்னாட்டுத் தமிழரும், பண்பாடும் என்ற பெயரிலும், கொங்கு நாடு பல்கலைக் கழகத்தில் முனைவர் த.பிரியா, ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் புதினங்களில் புலம் பெயர்ந்தோரின் வாழ்வியல் சிக்கல்கள் என்ற பெயரிலும் புத்தகம் எழுதியுள்ளனர் என்பது அவரது சிறப்புகளை உணர்த்துவன.

**‘அயலி’ இயக்குநர் முத்துக்குமார் என்ன சொல்கிறார்?**

லண்டனில் வசிக்கும் இலங்கைத் தமிழ் பெண் எழுத்தாளர் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் குற்றச்சாட்டு குறித்து (09ஆம் பக்கம் பார்க்க)



# ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத்தேர்தல்: தி .மு. க. கூட்டணிக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஏந்தியுள்ள பிரசார ஆயுதம் என்ன?

**மோகன்**

ஒரு சட்டமன்ற தொகுதியின் இடைத்தேர்தல் ஒட்டுமொத்த தமிழ்நாட்டு அரசியலின் மையப் புள்ளி யாக மாறியுள்ளது. ஈரோடு கிழக்கு சட்ட மன்ற உறுப்பினராக இருந்த காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு மகன் ஈ.வே.ரா உடல்நலக் குறைவால் மறைந்தார். இதனால் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி காலியானதாக அறிவிக்கப்பட்டு இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்டது.

இடைத்தேர்தல் தேதி அறிவிக்கப்பட் டதில் இருந்தே ஈரோடு கிழக்குத் தொகுதி பரபரப்புடன் காணப்படுகிறது. தற்போது இறுதி வேட்பாளர் பட்டியல் அறிவிக்கப்பட்டு தேர்தல் பிரசாரம் மிகத் தீவிரமாக நடைபெற்று வருகிறது. தமிழ்நாட்டு அரசியலின் தற்போதைய மையப்புள்ளி போல இயங்கி வரும் ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் பிரசாரம் எவ்வாறு நடைபெறுகிறது? என்னென்ன பிரச்னைகள் விவாதிக்கப்படுகின்றன?

திமுக - காங்கிரஸ் கூட்டணி சார்பில் மூத்த காங்கிரஸ் தலைவர் ஈ.வி.கே.எஸ் இளங்கோவன் போட்டியிடுகிறார். கடந்த தேர்தலில் இந்தத் தொகுதியில் அதிமுக கூட்டணி சார்பில் தமிழ் மாநில காங்கிரஸ் போட்டியிட்டு 8,900 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியுற்றிருந்தது. ஆனால் இம்முறை அதிமுக நேரடியாகக் களம் காண்கிறது. அதிமுக கூட்டணி சார்பில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ். தென்னரசு போட்டியிடுகிறார்.

ஓ.பி.எஸ் தரப்பில் அறிவிக்கப்பட்ட வேட்பாளர் இரட்டை இலை சின்னத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவும் டிடிவி தினகரன் தரப்பில் அறிவிக்கப்பட்ட வேட்பாளர் குக்கர் சின்னம் கிடைக்காததாலும் பின்வாங்கினார்கள். தேமுதிக சார்பில் ஆனந்த், நாம் தமிழர் கட்சி சார்பில் மேனகா நவநீதன் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டத்தில் இருந்தே ஈரோடு கிழக்கு சூடு பிடிக்கத் தொடங்கிவிட்டது. ஆளும் திமுக - காங் கிரஸ் கூட்டணி சார்பில் வேட்பாளர் அறிவிக்கப்படும் முன்னரே கூட்டணிக்காக தேர்தல் பிரசாரத்தை தொடங்கி விட்டனர். அதிமுக கூட்டணி தரப்பில் வேட்பாளர் அறிவிக்கப்படுவது சற்று தாமதமானாலும் தற்போது முழு வீச்சில் பிரசாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் திமுக தேர்தல் பணிக்குழு அமைக்கப்பட்டது. திமுக அமைச்சர்கள் பகுதி வாரியாக முகாமிட்டு தேர்தல் பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

அதிமுக தரப்பில் சட்டமன்ற எதிர்க் கட்சி கொறடா எஸ்.பி.வேலுமணி மற்றும் முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் தலைமையில் முன்னாள் அதிமுக அமைச்சர்களும் ஈரோடு கிழக்கில் முகாமிட்டு பகுதி வாரியாக பிரசாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

தனித்து தேர்தலைச் சந்திக்கும் நாம் தமிழர், தேமுதிக ஆகிய கட்சிகளும் தங்கள் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின் றனர். கட்சிகளின் தொண்டர்களும் தலைவர்கள் போல வேடமணிந்து தனித்துவமான வழிகளில் வாக்கு சேகரித்து வருகின்றனர்.



**ஈரோடு கிழக்குத் தொகுதி -சில அடிப் படைத் தகவல்கள்**

ஈரோடு மாநகராட்சி யின் 60 வார்டுகளில் 33 வார்டுகள் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதிக்கு கீழ் வருகின்றன.

ஜவுளித் துறை சார்ந்து இயங்கும் பல்வேறு தொழில்களின் மையமாகவும் இந்தத் தொகுதி உள்ளது. மஞ்சள் போன்ற வேளாண் சார்ந்த தொழில்களும் இங்கு கணிசமாக உள்ளன.

ஈரோடு கிழக்குத் தொகுதியில் மொத் தம் 2,26,898 வாக்காளர்கள் உள்ளனர். மாநகர் சார்ந்த தொகுதி என்பதால் மாநகரின் பிரச்னைகள், கோரிக்கைகள்தான் பிரதானமாகத் தாக்கம் செலுத்துகின்றன.

**தேர்தல் பிரசாரம் எவ்வாறு உள்ளது?**

இடைத்தேர்தலில் களம் காணும் பிர தானமான இரு கூட்டணிகளுக்கும் திமு கவின் தேர்தல் அறிக்கைதான் முக்கிய பிரசார கருவியாக உள்ளது.

திமுக, காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் கடந்த இரண்டு ஆண்டு திமுக ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட இலவச பேருந்து பயணம் போன்ற புதிய திட்டங்கள் மற்றும் நிறைவேற்றப்பட்ட தேர்தல் வாக்குறுதிகளை மையப்படுத்தியே தங்களின் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றன.

அதேநேரம் அதிமுகவின் தேர்தல் பிர சாரம் திமுக அரசு நிறைவேற்றாத தேர்தல் வாக்குறுதிகளை மையப்படுத்தியே உள்ளன. ரேஷன் அட்டைதாரர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய், கேஸ் சிலிண்டருக்கு மானியம் போன்ற திமுகவின் தேர்தல் வாக்குறுதிகள் அதிமுகவின் தேர்தல் பிரசாரத்தில் அதிகம் எழுப்பப்படுகின்றன.

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, திமுகவின் தேர்தல் அறிக்கையை கையில் வைத்துக்கொண்டேதான் பிரசாரத்தை மேற்கொண்டார். ஒரு பிரசார கூட்டத்தில் பேசிய அவர், 'திமுக ஆட்சிக்கு வந்து 21 மாதங்கள் ஆகிவிட் டன. மாதம் 1,000 ரூபாய் வழங்குவதாக கூறினார்கள். 21 மாதங்கள் ஆகியும் இன்னும் வழங்கவில்லை. முதல்வர் ஸ்டாலின் பிரசாரத்துக்கு வருகிறபோது 21,000 ரூபாய் எங்கே எனக் கேளுங்கள்," என்றார். இவை ட்விட்டர் உள்ளிட்ட சமூக ஊட கங்களிலும் அதிமுக தரப்பினராலும் ட்ரெண்ட் செய்யப்பட்டன.

திமுக கூட்டணியின் பிரசாரங்களை காங்கிரஸ், திமுகவின் முக்கிய தலைவர்கள் பெரும்பாலான இடங்களில் இணைந்தே மேற்கொள்கின்றனர். திமுக அமைச்சர்கள் அக்கூட்டணியின் வேட்பாளர் ஈ.வி.கே.எஸ் இளங்கோவனுக்கு ஆதரவாக வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

அதிமுகவின் பிரசாரத்தில் கூட்டணி கட்சித் தலைவர்களை அதிகம் பார்க்க முடிவதில்லை. இரட்டை இலை சின்னம் மற்றும் எடப்பாடி பழனிசாமியை முன்னிறுத்தியே தற்போது வரை அதிமுகவின் பிரசாரம் கட்டமைக்கப்பட்டு வருகிறது.

பாஜக மாநில தலைவர் அண்ணாமலை அடுத்த வாரத்தில் ஈரோடு கிழக்குத் தொகுதியில் பிரசாரம் மேற்கொள்ள இருப்பதாகக் கூறப்படுகிறது. இது தொடர்பாக கோவையில் ஒரு செய்தியாளர் சந்திப்பில் பதிலளித்த பாஜக தலைவர் அண்ணாமலை, 'பாஜக தலைவர்கள் அதிமுக தலைவர்களுடன் பேசி வருகின்றனர். விரைவில் ஈரோட்டில் இரு கட்சித் தலை வர்களும் பங்கேற்கும் பொதுக்கூட்டம் நடைபெறும்," என்றார்.

உள்ளாட்சித் தேர்தலுக்குப் பிறகு அமல்படுத்தப்பட்ட சொத்துவரி உள்ளிட்ட வரி உயர்வு மற்றும் மின் கட்டண உயர்வும் தேர்தல் பிரசாரத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றன. அதிமுகவினர் தங்களுடைய பிரசாரத்திலும் இதைத் தொடர்ந்து எழுப்பி வருகின்றனர்.

ஈரோடு கிழக்குத் தொகுதியில் நிறை வேற்ற வேண்டிய திட்டங்கள் மற்றும் முக்கிய கோரிக்கைகள் அனைத்து வணிக சங்க கூட்டமைப்பின் சார்பில் இரண்டு வேட்பாளர்களிடமும் கொடுக்கப்பட் டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி ஈரோடு கிழக்கில் மூன்று நாள் பிரசார பயணம் மேற்கொண்டார். தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன் இரு நாட்கள் பிரசாரம் மேற்கொண்டார். திமுகவின் கனிமொழி உள்ளிட்ட பல முக்கிய தலைவர்கள் பிரசாரம் மேற்கொண்டுள்ளனர். முதல்வர் ஸ்டாலின், பாஜக தலைவர் அண்ணாமலை உள்ளிட்ட பல முக்கிய தலைவர்களும் இனி வரும் நாட்களில் தான் பிரசாரம் மேற்கொள்ள இருக்கின்றனர்.

ஆளும் கட்சியான திமுகவிற்கும் அதன் கூட்டணிக்கும் 21 மாத கால ஆட்சி மற் றும் உள்ளாட்சி அமைப்புகளின் செயல் பாட்டை மதிப்பிடும் ஒரு தேர்வுக் கள மாகவே ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் பார்க்கப்படுகிறது.

அதேநேரம் அடுத்தடுத்த தேர்தல் தோல்வி, கூட்டணியிலிருந்து கட்சிகள் விலகல் மற்றும் உட்கட்சி சிக்கல்களைச் சந்தித்து வரும் அதிமுகவிற்கு இந்தத் தேர்தல் தன்பலத்தையும் தன் கூட்டணி பலத்தையும் பரிசோதித்துப் பார்க்கும் சோதனை களமாகவும் இந்த இடைத் தேர்தல் அமைந்துள்ளது.

தேர்தல் முடிவுகள் எவ்வாறாக இருந் தாலும் அடுத்த ஆண்டு வரக்கூடிய நாடாளுமன்ற தேர்தல் மற்றும் 2026 ஆம் சட்டமன்ற தேர்தலில் தாக்கம் செலுத்தவதாகவே அமையும் நிலை உள்ளது.

ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத் தேர்தல் வாக்குப் பதிவு பிப்ரவரி 27ஆம் தேதியும் வாக்கு எண்ணிக்கை மார்ச் 2ஆம் தேதி நடைபெற இருக்கிறது. ■

## அயலி கதை களவாடியதா?...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

'அயலி" இயக்குநர் முத்துக்குமாரிடம் விளக்கம் கேட்கப்பட்டது. எழுத்தாளர் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் குற்றச்சாட்டுகளை திட்டவட்டமாக மறுத்த அவர், 'அயலி கதை குறித்துச் சிந்தித்த போது தில்லையாற்றங்கரை நாவல் குறித்தோ, அதன் எழுத்தாளர் பற்றியோ சிறிதும் அறிந்திருக்கவில்லை. புத்தகம் மற்றும் எழுத்தாளர் பெயர் கூட எனக்குத் தெரியாது." என்று கூறிவிட்டு, அயலி கதையை உருவாக்கிய விதத்தை எடுத்துரைத்தார்.

**'அயலி" கதை உருவானது எப்படி?**

'கொரோனா பேரிடர் காலத்தின் போது, சென்னை அசோக் நகரில் நண்பர் ஒருவருடன் இருந்த போது, அங்கிருந்த பிள்ளையார் கோயிலில் நவ நாகரிக ஆடை அணிந்த வட இந்திய பெண், தனது தாயாருடன் வணங்கியதைப் பார்த்தேன். அப்போது, தமிழ்நாட்டில் பெண்கள் உயர்ந்த நிலையை எட்டியிருப்பதாகக் கூறி நண்பரிடம் சிலாகித்தேன். அதற்கு அவர், சில நாட்களுக்கு முன்புதான் புதுக்கோட்டையில் பூப்பெய்த சில மாதங்களிலேயே சிறுமி ஒருவருக்கு திருமணம் நடந்ததாக தெரிவித்தார். குழந்தை திருமணம் வழக்கொழிந்து விட்டதாக நான் கருதியிருந்த நேரத்தில், நண்பரின் பதில் அதிர்ச்சியளித்தது. அந்த நிகழ்வு தந்த வேதனையில்தான், குழந்தை திரு மணத்திற்கு எதிரான படத்தை உருவாக்க திட்டமிட்டேன். ஒரு கிராமமே அந்த நிலையில் இருந்ததாக குறிப்பிடுவது இந்த கால கட்டத்தில் பொருத்தமாக இருக்காது என்ற காரணத்தால்தான் கதை 1990-களில் நடப்பதாக மாற்றி னேன். நாயகியை நாயகன் காப்பாற்றுவது போன்ற தமிழ்த் திரைப்படங்களின் ஸ்டீரியோ டைப்பை உடைக்க வேண்டும் என்று நினைத்தேன். பெண்ணே தனது பிரச்னைகளை துணிச்சலாக எதிர்கொள்ள வேண் டும் என்ற அடிப்படையில் தான் நாயகி தாமே முயன்று தளைகளை உடைத்து இலக்கு நோக்கி பயணிப்பதாக கதையமைத்தேன்." என்று அவர் கூறினார்.

**'என் சிந்தையை கூர்தீட்டிய எழுத்தாளர்களுக்கு நன்றி கூறியுள்ளேன்"**

அயலி தெய்வத்தின் முன் நின்று நாயகி தமிழ்ச்செல்வி 'தான் பூப்பெய்துவிடக் கூடாது" என்று வேண்டிக் கொள்ளும் காட்சிதான் அயலி கதையில் தனக்கு மிகவும் பிடித்தமான காட்சி என்று அவர் குறிப்பிட்டார். 'வெளியுலகம் அறிந்திடாத நாயகியின் குழந்தைத்தனத்தையும், அவள் உள்ளக்கிடக்கையையும் வெளிப்படுத்தும் அந்த இடம் தான் எனக்கு மிகவும் பிடித்தது. அந்த வயதுப் பெண்ணின் மன ஓட்டத்தை சரியாக கூறியிருப்பதாகவே நான் எண்ணுகிறேன். பெண்களின் மனம், சிந்தனை, உணர்வுக ள் போன்றவற்றை புரிந்து கொள்ள தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளே எனக்கு உதவின.

அந்த வகையில், அயலி கதையை வடிவமைக்க உதவிகரமாக அமைந்த படைப்புகளுக்காக தொ.பரமசிவன், தமிழ்ச் செல்வன், கீதா இளங்கோவன், மாதவி குட்டி, பிரியா தம்பி ஆகியோருக்கு நன்றி தெரிவித்து தொடரின் இறுதியில் அவர்களது பெயர்களையும் இடம்பெறச் செய்திருக்கிறேன். அவர்களது படைப்புகளில் இருந்து அயலி கதைக்காக நான் எதுவும் எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால், அந்த படைப்புகளே என் சிந்தனையை கூர்தீட்டின, நாயகியின் இடத்தில் இருந்து சிந்தித்து கதை எழுத உதவின என்பதற்காகவே அவர்களுக்கு நன்றி தெரிவித்திருந்தேன்." என்று அவர் கூறினார்.

**'அயலி கதை என்னுடையது. உரிய இடத்தில் நிரூபிப்பேன்"**

'உண்மை இவ்வாறிருக்க, எழுத்தாளர் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் குற்றச்சாட்டு குறித்த முகநூல் பதிவை 2 நாட்களுக்கு முன்பு நண்பர்கள் சுட்டிக்காட்டினார்கள். அப்போதுதான் அவரது பெயரையும், அவர் எழுதிய நாவலையும் நான் கேள்விப்பட்டேன். இதுவரை நான் அந்த புத்தகத்தை படித்துக் கூட பார்க்கவில்லை. ஆகவே, அயலி தொடருடன் அந்த நாவல் ஒத்துப் போகின்றதா என்று என்னால் கூற முடியாது. வழக்கு தொடர அவர் தயாராகி வருவதாக அந்த பதிவில் குறிப்பிடப்பட்டிருப்பதாக நண்பர்கள் கூறினார்கள். ஆனால், என்னைப் பொருத்தவரை நான் எந்த தவறும் செய்யவில்லை. அயலி கதை என் சிந்தையில் உதித்தது. சென்னை அசோக் நகரில் நடந்த நிகழ்வால் மனதில் உதித்த சிறு பொறியே அயலி கதையாக மாறியது. அயலி கதை என்னுடையது என்பதை உரிய இடத்தில் நிரூபிப்பேன்," என்றார் இயக்குநர் முத்துக்குமார் மிகவும் திட்டவட்டமாக.

(பிபிசி)

# யாழ்ப்பாண கலாசார நிலையத்தை மாநகர சபையிடம் வழங்கவேண்டும்

## அர்ஜூன் சம்பத் வலியுறுத்து

யாழ்ப்பாணம், பெப். 20

யாழ்ப்பாண மத்திய கலாசார நிலையத்தை யாழ். மாநகர சபையிடமே கையளிக்க வேண்டும். அதற்கான அழுத்தங்களை இந்திய அரசாங்கத்துக்கு வழங்குவோம் என இந்து மக்கள் கட்சியின் தலைவர் அர்ஜ/ன் சம்பத் தெரிவித்தார்.

சிவராத்திரியை முன்னிட்டு இலங்கையில் உள்ள பஞ்ச ஈச்சரங்களையும் தரிசிப்பதற்காக தமிழகத்தில் இருந்து இந்து மக்கள் கட்சியினர் வருகை தந்த நிலையில், யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தியா - இலங்கை இடையேயுள்ள உறவு புராண, இதிகாச வரலாற்றுச் சிறப்புமிக்க உறவு. இந்த உறவை மேம்படுத்த வேண்டும். இதற்காகத்தான் சிவசேனை தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் ஐயா இலங்கைக்கும் இந்தியாவுக்கும் கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்க வேண்டும் என 10 வருடங்களாக வலியுறுத்தி வந்தார்.

இதேபோல் இத் திட்டம் எதிர்வரும் காலங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளது. விமானப் போக்குவரத்தும் இரு நாடுகளுக்குமிடையே அண்மையில் ஆரம்பமாகியுள்ளது.

பாரதப் பிரதமர் மோடி யுத்தத்துக்கு பின் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 5,000 இற்கும் மேற்பட்ட வீடுகளைக் கட்டிக் கொடுத்து நேரடியாக பால் காய்ச்சும் நிகழ்வில் பங்கெடுத்து, யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த முதல் பாரதப் பிரதமர் என்ற தடத்தையும் பதித்திருந்தார்.

தற்போது பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டிருக்கும் இலங்கைக்கு உதவிகளை அனுப்பினார். அத்தோடு சமீபத்திலும் கலாசார மண்டபம் இந்தியா அரசினால் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டு, மக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

இந் நிலையிலே நாம் இரு நாட்டுக்கிடையேயுள்ள தொப்புள் கொடி உறவை மேம்படுத்த வேண்டும். பாரத நாடு எப்பொழுதும் இன்னொரு நாட்டை ஆக்கிரமிக்க நினைத்ததில்லை. உதவி செய்வதை தவிர, ஏனைய நாட்டின் உள்ளக விடயங்களில் தலையிடுவதில்லை.

இரு நாட்டிலுள்ள அரசியல்வாதிகள், மத வெறியர்கள் மற்றும் சதிகாரர்களை போன்றவர்களைப் புறந்தள்ளிவிட்டு இரு நாட்டு மக்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

இலங்கை இந்தியாவுடன் பின்னிப்பிணைந்த நாடு. இது குபேரன், இராவணன் போன்றோர் ஆண்ட நாடு. தற்சமயம் இரு நாடுகளின் இராச்சியங்கள், அரசியல் மற்றும் அரசுகள் வேறுபட்டாலும் நாம் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்.

தற்போது இங்கு மோசடி, மத மாற்றம் மிகப்பெரிய சவாலாக உருவெடுத்துள்ளது. உதாரணமாக திருக்கேதீச்சரத்தில் மதமாற்ற நடவடிக்கைகள் போன்றனவற்றை குறிப்பிடலாம். இவற்றுடன் ஈஸ்டர் குண்டு வெடிப்பு போன்ற மத பயங்கரவாதம் கடந்த காலத்தில் இலங்கையில் இடம்பெற்றுள்ளதையும் குறிப்பிட முடியும்.

சீனா கட்டிக்கொடுத்த கலாசார மையத்தை தன் கட்டுப்பாட்டிலே வைத்திருக்கின்றது. மாறாக இந்திய அரசாங்கத்தால் கட்டிக்கொடுக்கப்பட்ட கலாசார மண்டபமானது இலங்கை அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்த கலாசார மண்டபத்தை யாழ். மாநகர சபையிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகவும் காணப்படுகின்றது. இதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான கலாசார ரீதியான உறவுகளை மேம்படுத்த முடியும்.

திருக்கேதீச்சரத்தில் தோரணவாயில் அமைக்கப்பட வேண்டும். திருக்கோணேச்சரம் இராவண வரலாறு போன்றன மீளக் கட்டமைக்கப்பட வேண்டும். திருகோணேச்சர ஆலயம் தொடர்பாகவும் அங்கு தொல்லியல் திணைக்களத்தினரின் செயற்பாடுகள் தொடர்பாகவும் நாங்கள் இந்திய அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு செல்வோம்.

இதேபோல் இலங்கையில் சிவசேனையானது, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. மத மாற்றத்திற்கு எதிரான நடவடிக்கைகளுக்கு எதிராக தொடர்ந்தும் குரல் கொடுத்து வருகின்றது. பசு வதை சட்டத்தை கொண்டுவர சிவசேனை அமைப்பின் பங்களிப்பு அளப்பெரியதாகக் காணப்பட்டது. மறவன் புலவு சச்சிதானந்தன் ஐயாவின் பணிகளுக்கும் சிவசேனையின் பணிகளுக்கும் என்றென்றும் தோளோடு தோள் கொடுப்போம்.

ஈழத் தமிழர்களுக்காக இந்தியா தொடர்ந்தும் குரல் கொடுக்கவும், செயற்படவும் தயாராக இருக்கின்ற நிலையில், 13ஆம் திருத்தம் தொடர்பில் சிலர் அறியாமல் பேசுகின்றனர். 13ஆம் திருத்தம் அமுல்படுத்தப்பட வேண்டும் - என்றார்.

# உள்ளூராட்சி தேர்தல் வழக்கு; இன்று விசாரணைக்கு வருகிறது

கொழும்பு, பெப். 20

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தத் தடை விதிக்க வேண்டும் என்று கோரி ஓய்வுபெற்ற இராணுவ கேணல் டபிள்யூ. எம். ஆர். விஜயசுந்தர தாக்கல் செய்த மனு இன்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

இந்த மனு கடந்த 10 ஆம் திகதி அழைக்கப்பட்டபோது, மனுவை 23ஆம் திகதி பரிசீலிக்க உயர்நீதிமன்றத்தின் 3 நீதியரசர்கள் அடங்கிய குழாம் உத்தரவிட்டது.

எவ்வாறாயினும், அன்றைய திகதிக்கு முந்தைய திகதியில் இதனை பரிசீலிக்குமாறு மனுதாரர் நகர்த்தல் பத்திரம் மூலம் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதன்படி, உள்ளூராட்சி தேர்தலை ஒத்திவைத்து உத்தரவு பிறப்பிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவை இன்று விசாரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஐ)

கல்வி tv CHANNEL-1

**20.02.2023**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**20.02.2023**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# அம்பாறையில் தொடர் மழை; 5,000 ஏக்கர் நெல் வெள்ளத்தில்!

அக்கரைப்பற்று, பெப். 20

**அம்பாறை மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் அறுவடை செய்யப்படவிருந்த சுமார் 5 ஆயிரம் ஏக்கர் நெல் பயிர்கள் நீரில் மூழ்கின என்று தெரிவிக்கப்பட்டது.**



ஆலையடிவேம்பு, இறக்காமம், அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில், பொத்துவில், திருக்கோவில், அக்கரைப்பற்று, நிந்தவூர், சம்மாந்துறை, காரைதீவு மற்றும் நாவிதன்வெளி ஆகிய பிரதேசங்களிலுள்ள நெல் வயல்களே நீரில் மூழ்கியுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் 50 சதவீதமான நெல் அறுவடையே நிறைவடைந்தது. இவ்வாறு அறுவடை செய்யப்பட்ட நெல்லும் குறைந்த விலைக்கே விற்பனை செய்யப்பட்டது.

அரசாங்கம் உத்தரவாத விலைக்கு நெல்லை கொள்வனவு செய்வதாக அறிவித்தும் ஆக்கபூர்வமான எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

இதேநேரம், தொடர் மழையால் முன்னர் அறுவடை செய்யப்பட்ட நெல்லை உலர வைக்கவும் முடியாத நிலை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(ஐ)

# தேர்தல் தாமதத்தை பயன்படுத்தி வட்டார முறையை அமுல்படுத்துக

## ஜனாதிபதிக்கு ஹஸன் அலி கடிதம்

கொழும்பு, பெப். 20

“தேர்தல் காலதாமதம் ஏற்படும் கால வரையறைக்குள் புதிய தேர்தல் வட்டார முறையினை சட்டபூர்வமாக்கி அதன் அடிப்படையில் அடுத்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதனை கவனத்தில் கொள்க.”

- இவ்வாறு ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எம். ரி. ஹஸன் அலி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் வலியுறுத்தியுள்ளார்.

அந்த கடிதத்தில் மேலும் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மார்ச் 9ஆம் திகதி நடைபெறுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள், நிதி பற்றாக்குறை காரணமாக தற்பொழுது ஒத்தி வைக்கப்பட வேண்டிய ஒரு நிலமை தொடர்வதனை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. அத்தியாவசிய தேவைகளை முதன்மைப்படுத்த வேண்டிய காரணத்தால் தேர்தலுக்கான மொத்த நிதியையும் உடனடியாக ஒதுக்க முடியாது என அரச திறைசேரி அறிவித்துவிட்டதனால் மேற்கொண்டு தேர்தலுக்கான ஆயத்த வேலைகள்திடீரென இடைநிறுத்தப்பட்டு தபால் வாக்களிப்புக்கான காலவரையும் கூட நீடிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தேர்தல் உடனடியாக நடைபெறும் சாத்தியம் அடுத்த பல மாதங்களுக்கு இல்லை என ஊகிக்க முடியும். இந்தப்பின்னணியில் ஏற்கனவே உங்களால் முன்வைக்கப்பட்ட உறுப்பினர்கள் தொகை குறைப்பு யோசனையானது தற்போது கவனத்தில் எடுக்கப்பட வேண்டும் என்பது பொருத்தமாகவிருக்கும்.

8 ஆயிரம் உறுப்பினர்கள் தொகையை 4ஆயிரமாகக் குறைப்பதன் மூலம் அடுத்த நான்காண்டுகளில் 500 கோடி ரூபாய்களை சேமிப்பதற்கு முடியுமென்று நீங்கள் கூறியதனைத் தொடர்ந்து அதற்கான முதல்படியாக வட்டார எல்லை நிர்ணயத்துக்கும் நீங்கள் உத்தரவிட்டுள்ளீர்கள். அதற்கேற்ப எல்லை நிர்ணய பணிகள் தற்போது முடிவடைந்த நிலையில் உள்ளதாக அறிகிறோம்.

நாட்டில் உள்ள பொருளாதார சிக்கல்கள் திட்டமிட்டப்படாத முறையில் கையாளப்பட்டதால் தற்போது அரச தொழில் வாய்புக்கள் நிறுத்தப்பட்டுள்ளன. ஆயுதப் படைகளிலும், அரச சேவைகளிலும் ஆள்குறைப்பு செய்ய வேண்டும் என சர்வதேச துறை சார்ந்த நிபுணர்கள் மட்டத்தால் நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டுள்ள இவ்வேளையில், 4 ஆயிரம் உறுப்பினர்களாக கொண்ட புதிய உள்ளூராட்சி முறைமையை உடனடியாக செய்யப்படுவதற்கான உரிய நடவடிக்கையை துரிதப்படுத்துவதானது சிறந்ததொரு செயலாக சர்வதேச ஆலோசகர்களாலும் ஏற்றுக்கொள்ளப்படும்.



எனவே, தேர்தல் காலதாமதம் ஏற்படும் காலவரையறைக்குள் புதிய தேர்தல் வட்டார முறையினை சட்டபூர்வமாக்கி அதன் அடிப்படையில் அடுத்த உளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதைக் கவனத்தில் கொள்வது நல்லது என்ற யோசனையை முன்வைக்கின்றேன். அத்துடன் தேர்தலுக்கான புதிய தினத்தையும் தற்போதே அறிவிக்கவும் உங்களால் முடியும்.

நாட்டின் பொருளாதாரத்தை திட்டமிட்டு வளப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் அனைவரும் 500 கோடி ரூபாயை உடனடியாக சேமிக்கக்கூடிய உங்களது இந்த முயற்சியை ஏற்றுக்கொள்வார்கள் என்பது திண்ணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-06)

# மட்டு. மாவட்ட செயலகத்தில் இன்று இரத்ததான முகாம்!

மட்டக்களப்பு, பெப். 20

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை வழங்கும் நிகழ்வு அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு போதனா மருத்துவமனையின் அவசரப் பிரிவில் ஏற்பட்டுள்ள இரத்தப் பற்றாக்குறையை கருத்தில்கொண்டு, ‘‘உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்’’ எனும் தொனிப்பொருளில் இந்த இரத்த தான முகாம் ஏற்பாடு செய்துள்ளது.

இந்த நிகழ்வில் அனைவரையும் பங்கேற்று குருதி தானம் வழங்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# மாளிகைக்காடு மையவாடிக்கு புதிய காணி தருமாறு கோரிக்கை

அக்கரைப்பற்று, பெப். 20

அம்பாறை -மாளிகைக்காடு பிரதேச ஜனாஸா மையவாடி கடலரிப்புக்குள்ளாகி பாவிக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இதையடுத்து, புதிய ஜனாஸா மையவாடியை அமைக்க காணி தேவையாகவுள்ளது. இது தொடர்பில் துரித நடவடிக்கை எடுத்து புதிய காணியொன்றை வழங்குமாறு கோரி ஜனாதிபதி, பிரதமர், காணியமைச்சர், உள்நாட்டலுவல்கள் அமைச்சர், கிழக்கு மாகாண ஆளுநர், அம்பாறை அரசாங்க அதிபர், காரைதீவு மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலாளர்கள் ஆகியோருக்கு மாளிகைக்காடு அல்- மீஸான் பௌண்டஷன் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

சுமார் 10 ஆயிரம் மக்கள் இந்த மையவாடியை பயன்படுத்துகின்றனர். இது தொடர்பில் உடனடியாக மாற்று ஏற்பாடு ஒன்றை செய்யுமாறும் அந்த அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

(ஐ)

# டெங்கு நோயால் இளைஞர் உயிரிழப்பு ஒருநாளில் 14பேர் மருத்துவமனையில்!

மட்டக்களப்பு, பெப். 20

டெங்கு நோய்த் தாக்கம் காரணமாக இளைஞர் ஒருவர் ஏறாவூரில் உயிரிழந்தார். இந்நிலையில், டெங்கு நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகி நேற்று முன்தினம் மட்டும் 14 பேர் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் கு. சுகுணன் தெரிவித்துள்ளார்.

ஏறாவூர் - ஐயங்கேணி பாரதி கிராமத்தைச் சேர்ந்த பகீரதம் தனுஷ்கரன் (வயது 22) என்பவரே டெங்கு நோயால் உயிரிழந்தவராவார்.

உயிரிழந்த இளைஞர் நோய்த் தாக்கம் காரணமாக கடந்த 16 ஆம் திகதி மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் அவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை உயிரிழந்தார்.

இதேசமயம், பருவமழை இடையிடையே தொடர்வதால் மட்டக்களப்பில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து வருகின்றது. களுவாஞ்சிக்குடி, செங்கலடியை சேர்ந்த தலா இருவரும் வாழைச்சேனையில் ஒருவரும் கோறளைப்பற்று மத்தி., மட்டக்களப்பு நகரப் பகுதியில் தலா நால்வருமாக 14 பேர் டெங்கு நோய் தாக்கம் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கத்தை சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருக்கவும் காய்ச்சல் போன்ற உடல்நலப் பாதிப்புகள் ஏற்படும்போது உடனடியாக மருத்துவ ஆலோசனையை பெறுமாறும் சுகாதார மருத்துவ அதிகாரி அறிவுறுத்தியுள்ளார்.

(ஐ)

# திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் பொலிஸாரால் மீட்கப்பட்டது!

காரைதீவு, பெப். 20

திருடிச் செல்லப்பட்ட மோட்டார் சைக்கிளொன்று கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டதாக காரைதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறை - காரைதீவு பொலிஸ் பிரிவில் வர்த்தக நிலைய உரிமையாளர் ஒருவரின் மோட்டார் சைக்கிள் கடந்த 7ஆம் திகதி திருடப்பட்டது. இது தொடர்பில் கடந்த 8ஆம் திகதி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டிருந்தனர். இந்நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மோட்டார் சைக்கிள் ஒன்று அநாதரவாக நிற்பதாக பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டது.

கல்முனை பொலிஸாரால் மீட்கப்பட்ட இந்த மோட்டார் சைக்கிள் தொடர்பில் காரைதீவு பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து அந்த மோட்டார் சைக்கிள் காரைதீவு பொலிஸாரால் மீட்கப்பட்டது.

இதனிடையே கடந்த வியாழக்கிழமை மற்றொரு மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளது. இது தொடர்பிலும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம், அண்மைக்காலமாக மோட்டார் சைக்கிள்கள் திருட்டு இப்பகுதியில் அதிகரித்து வருகிறது என்றும் இது குறித்து அவதானமாக செயல்படுமாறும் பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ)

# நகைகளை திருடிய சந்தேகநபர் கைது!

வாழைச்சேனை, பெப். 20

புனானையில் ஓய்வு பெற்ற இராணுவ மேஜர் ஒருவரின் வீட்டில் 4 பவுண் தங்க ஆபரணங்களை திருடிய சந்தேகநபரை வாழைச்சேனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த டிசெம்பர் மாதம் இடம்பெற்ற இந்த திருட்டு சம்பவத்தில் தங்கசங்கலி காப்பு, தோடு என்பவை திருடப்பட்டன. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில், திருடப்பட்ட நகைகளை சந்தேகநபர் நீர்கொழும்பில் கடை ஒன்றில் அடைவு வைத்துள்ளார் என்று தெரிய வருகின்றது. அடைவு வைக்கப்பட்ட நகைகளை நீதிமன்ற அனுமதியுடன் மீட்கும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

(ஐ)

# ஒடுக்குமுறையை எதிர்த்தவர்கள் காணாமல் ஆக்கப்படுகின்றனர்

## சீனா மீது குற்றச்சாட்டு



**சிங்கப்பூர், பெப். 20**

**தொற்று நோய்க்கு எதிரான வெற்றியை சீனா அறிவிக்கையில் பூச்சிய கோவிட் விதிகளை எதிர்த்து போராடியவர்கள் பலர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் என்று பி. பி. சி தெரிவித்துள்ளது.**

சீனாவில் கடந்த நவம்பரில் பூச்சிய கோவிட் சட்டத்துக்கு எதிராக போராட்டம் ஆரம்பமானது. இந்த ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்றவர்கள் பலர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். எதிர்ப்பாளர்கள் மீது அதிகாரிகள் கடுமையான அடக்குமுறைகளை பிரயோகித்தனர்.

அரசாங்கத்தின் கோவிட் விதிகளை எதிர்த்து போராடியவர்கள் வெள்ளை தாள்களை கைகளில் ஏந்தியவாறு போராடினர். ஆயிரக்கணக்கானவர்கள் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர். இந்தப் போராட்டம் சீன ஜனாதிபதி ஸீ ஜின்பிங்குக்கு எதிரான - அவர் மீதான விமர்சனத்தின் அரிய நிகழ்வாகப் பார்க்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் பங்கேற்ற பலர் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட ஏராளமானவர்கள் பொலிஸாரின் தடுப்பில் உள்ளனர். சுமார் 100 பேருக்கும் மேற்பட்டவர்கள் கைதாகியுள்ளனர் என்று ஒரு குழு மதிப்பிட்டுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் குழுக்கள் மற்றும் ஆர்வலர்கள் அவர்களை விடுதலை செய்ய வலியுறுத்துகின்றனர். கைதானவர்களின் பெயர் விவரங்களும் வெளியிடப்பட்டுள்ளன. எனினும், இது தொடர்பான கேள்விகளுக்கு சீன அதிகாரிகள் பதில் அளிக்கவில்லை என்றும் கூறப்படுகின்றது. (ஐ)



# ஜப்பானின் கடல் எல்லைக்குள் ஏவுகணை ஏவியது வடகொரியா!

சியோல், பெப். 20


கண்டம்விட்டு கண்டம் பாயும் ஏவுகணையொன்றை ஜப்பானின் பிரத்தியேக பொருளாதார வலய கடற்பகுதியில் வட கொரியா நேற்று ஏவியுள்ளதாக ஜப்பானிய அரசாங்கம் தெரவித் துள்ளது.

இந்த ஏவுகணை கிழக்கு நோக்கி ஏவப்பட்டதாகவும் 66 நிமிடங்கள் அது பறந்ததாகவும் ஜப்பானிய அரசாங்கத்தின் பிரதம பேச்சாளர் ஹிரோகஸ் மட்சுனோ தெரிவித்துள்ளார்.

அதிகபட்சமாக 5,700 கிலோ மீற்றர் உயரத்துக்கு அது சென்றதாகவும் அவர் கூறியுள்ளார்.

'வட கொரியாவின் இத்தகைய தொடர் நடவடிக்கைகள் ஜப்பான் மற்றும் சர்வதேச சமூகத்தின் சமாதானத்துக்கும் ஸ்திரத்தன்மைக்கும் அச்சுறுத்தலாகும். அமெரிக்கா, தென் கொரியா உட்பட சர்வதேச சமூகத்துடன் ஒருங்கிணைந்து செயற்படுவதன் மூலம் இதற்கு ஜப்பான் பதிலளிக்கும்' எனவும் அப்பேச்சாளர் கூறியுள்ளார்.(ஐ)

# கத்தோலிக்கத் துணை ஆயர் அமெரிக்காவில் சுட்டுக் கொலை!



லொஸ்ஏஞ்சல்ஸ், பெப். 20

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் உயர் மறை மாவட்டத்தின் துணை ஆயர் ஒருவர் சனிக்கிழமை ஹசியெண்டா ஹைட்ஸ் என்ற இடத்தில் சுட்டுக் கொல்லப்பட்டமையை அதிகாரிகள் உறுதிப்படுத்தினர்.

பிஷப் டேவிட் ஓ'கானல் மதியம் ஒரு மணிக்கு முன்னதாக சுட்டுக் கொல்லப்பட்டார்.

லொஸ் ஏஞ்சல்ஸ் கவுண்டி ஷெரிப் துறையின்படி, ஜான்லு அவென்யூவின் 1500 தொகுதியில் உள்ள ஒரு வீட்டுக்குள் அவரின் சடலம் மீட்கப்பட்டது. 45 ஆண்டுகளாக லொஸ் ஏஞ்சல்ஸில் பாதிரியாராகவும் பின்னர் பிஷப்பாகவும் இருந்த ஓ கானல் ஓர் அறையில் அவரது மேல் உடற்பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் அவரின் சடலம் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

மேலும் விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை என்றாலும், இது சந்தேகத்திற்கிடமான மரணம் என துப்பறியும் நபர்கள் விசாரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஐ. எஸ். தாக்குதலில் 53 பேர் சிரியாவில் பலி!

டமாஸ்கஸ், பெப். 20

சிரியாவின் மத்திய பாலைவன மாகாணமான ஹோம்ஸில் நடத்தப்பட்ட தாக்குதலில் 53 பேர் கொல்லப்பட்டனர் என்று அந்நாட்டு அரச ஊடகம் தெரிவித்துள்ளது.

தாக்குதல் குறித்து சிரிய அரசு ஊடகம் தரப்பில், "அல்-சோக்னா நகரின் தென்மேற்கில் உணவுப் பொருட்களை சேகரித்துக் கொண்டிருந்த மக்கள் மீது ஐ. எஸ். பயங்ரவாதிகள் இந்தத் தாக்குதலை நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், பால்மைரா அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட பலியானவர்களின் உடல்களில் தலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் இருந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து மருத்துவமனை வெளியிட்ட அறிக்கையில், "கொல்லப்பட்டவர்களில் 46 பேர் பொதுமக்கள். 7 பேர் இராணுவத்தினர். பலியானவர்களின் தலையில் துப் பாக்கிச் சூட்டு காயங்கள் இருந்தன. காயமடைந்தவர்களில் சிலர் வேறு மருத்துவ மனைகளில் சேர்க்கப் பட்டுள்ளனர்"

சிரியாவில் ஜனாதிபதி ஆசாத்துக்கும் ஐ. எஸ். பயங்கரவாதிகளுக்கும் இடையே பல ஆண்டுகளாக நடந்துவரும் சண்டை இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது. இதில் ஆசாத்துக்கு ரஷ்யா ஆதரவளித்து வருகிறது. ஐ. எஸ். பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சிரியாவின் பல்வேறு பகுதிகள் அரசின் கூட்டுப் படைகளால் மீட்கப் பட்டுவிட்டன. இந்நிலையில் கிளர்ச்சியாளர்களின் பிடியில் உள்ள சில இடங்களில் சண்டை அவ்வப்போது நடந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இஸ்ரேலின் தாக்குதலில் சிரியாவில் 15 பேர் பலி!

சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸில் மூத்த பாதுகாப்பு அதிகாரிகள் தங்கியிருந்த கட்டடத்தை இஸ்ரேலிய ஏவுகணை நேற்று ஞாயிற்றுக்கிழமை தாக்கியதில் குறைந்தது 15 பேர் கொல்லப்பட்டனர்.

மூத்த அதிகாரிகள், பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் புலனாய்வுத் தலைவர்கள் வசிக்கும் கஃபர் சோசா பகுதியே தாக்கப்பட்டது.

"காலை 00:22 மணிக்கு (உள்ளூர்நேரம்) டமாஸ்கஸ் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் உள்ள குடியிருப்புகள் உட்பட பல பகுதிகளை குறிவைத்து ஆக்கிரமிக்கப்பட்ட கோலன் குன்றுகளின் திசையில் இருந்து இஸ்ரேலிய எதிரி வான்வழி ஆக்கிரமிப்பை நடத்தியது" என்று சிரியாவின் பாதுகாப்பு அமைச்சகம் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.



சிரிய அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட முதல்த தகவலின்படி, ஐந்து பேர் இறந்தனர் மற்றும் பொதுமக்கள் உட்பட 15 பேர் காயமடைந்தனர். பின்னர், மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பகம் 15 பேர் கொல்லப்பட்டனர் என்று கூறியது.

தாக்குதல் ஒரு குறிப்பிட்ட நபரை இலக்காகக் கொண்டதா என்பது உடனடியாகத் தெரியவில்லை.

அரசாங்க ஊடகங்கள் பகிர்ந்துள்ள ஒரு காணொலியில், தாக்குதலில் 10 மாடி கட்டிடம் மோசமாக சேதமடைந்துள்ளதை கண்பித்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ரஷ்யாவுடன் மறைமுகமாக போரில் ஐரோப்பிய நாடுகள் ஈடுபட்டுள்ளன

## ஹங்கேரி பிரதமர் குற்றச்சாட்டு

புடாபெஸ்ட், பெப். 20

உக்ரைனுக்கான இராணுவ ஆதரவால் ஐரோப்பா ரஷ்யாவு டன் மறைமுகமாக போரில் ஈடு பட்டுள்ளதாக ஹங்கேரிய பிரத மர் விக்டர் ஓர்பன் தெரிவித் துள்ளார்.

நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இதற்காகவே, உக்ரைனுக்கு ஆயுதங்களை அனுப்ப மறுத்ததாகவும் குறிப்பிட்டார்.



"ஐரோப்பா போரில் மூழ்கி வருகிறது, உண்மையில் அவர் ஸ்ரீகள் ஏற்கனவே ரஷ்யாவுடன் மறைமுகமாக போரில் ஈடுபட்டுள்ளனர்" என்று கூறினார்.

உக்ரைனில் சண்டை பல ஆண்டுகளாக தொடரும். நேட் டோ, ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் ஹங்கேரியின் தலைவரான ஆர்பன், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினு டன் நெருங்கிய உறவுகளைக் கொண்டடுள்ளார்.

ஹங்கேரி தனது கிழக்கு அண்டை நாடுகளுக்கு ஆயுதங் களை வழங்காது என்றும் ரஷ் யாவை பாதுகாப்பு அச்சுறுத் தலாகக் கருதவில்லை என்றும் மீண்டும் வலியுறுத்தினார். "மூன்றாவது நாட்டைக் கூட் டாகத் தாக்குவதற்கு" பயன்ப டுத்தப்படுவதை விட ஒரு பாது காப்பு கூட்டணியாக இருக்க வேண்டும் - என்றார். (ஐ)

ஈழநாடு



# ஆஸியை மீண்டும் வீழ்த்தியது இந்தியா!



புதுடில்லி, பெப். 20

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் சென்றுள்ள அவுஸ்தி ரேலியா 4 டெஸ்ட் போட்டி கள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்ற நிலையில் இரண்டாவது டெஸ்ட் போட்டி டில்லியில் கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கி யது.

நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடி 263 ஓட்டங்களை சேர்த்தது. அடுத்துக் களமிறங்கிய இந்திய அணி 262 ஓட்டங்களை சேர்த்தது. ஓர் ஓட்டம் முன்னிலையில் இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய அவுஸ்திரேலியா இரண்டா வது நாள் முடிவில் ஒரு விக்கெட்டை இழந்து 61 ஓட்டங்களை சேர்த்திருந்தது. இதனையடுத்து நேற்று தொடங்கிய மூன்றாம் ஆட்டத்தில் ஜடேஜா, அஸ்வின் சுழலில் அவுஸ்திரேலியா 113 ஓட்டங்களில் சுருண்டது.

இதில், சுழல் பந்துவீச்சாளர்களான ஜடேஜா 7 விக்கெட்களையும் அஸ்வின் 3 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

115 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணிக்கு ரோஹித் சர்மா - கே. எல்.ராகுல் இணை தொடக்கம் கொடுத்தது. கே. எல். ராகுல் நம்பிக்கை அளிப்பார் என எதிர்பார்த்த நிலை யில் ஓர் ஓட்டத்துடன் பெவிலியன் திரும்பினார். மறுமுனையிலிருந்த ரோஹித் அதிரடி காட்டி 20 பந்து களில் 31 ஓட்டங்களை சேர்த்தார்.

எதிர்பாராதவிதமாக அவர் ரன் அவுட்டாக, விராட் கோலி - புஜாரா இணை இந்திய அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றது. கோலி 20 ஓட்டங் களில் ஆட்டமிழந்தாலும், புஜாராவுடன் இணைந்து ஸ்ரீகர் பரத் இந்தியாவை வெற்றிபெறச்செய்தார்.

இதன் மூலம் 26.4 ஓவர்களில் வெற்றி இலக்கை எட் டிய இந்திய அணி அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 2வது டெஸ்ட் போட்டியை 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வென்றது.

அவுஸ்திரேலியா அணி தரப்பில் நதன் லயன் 2 விக் கெட்களையும், முர்பி ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (ஐ)

# டெஸ்ட், ஒருநாள் போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டது

புதுடில்லி, பெப். 20

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 3 மற்றும் 4ஆவது டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணியையும், ஒருநாள் தொடருக்கான இந்திய அணியையும் இந்திய கிரிக்கெட் சபை நேற்று அறிவித்தது.

இதில் டெஸ்ட் அணியின் உபதலைவர் பதவியில் இருந்து கே. எல். ராகுல் நீக்கப்பட்டுள்ளார். டெஸ்ட் அணியின் உபதலைவர் யார் என்று இந்திய கிரிக்கெட் சபை அறிவிக்கவில்லை.

ஒருநாள் தொடருக்கான இந்திய அணிக்கு தலைவ ராக ரோஹித்தும், உபதலைவராக பாண்ட்யாவும் தொடர்கின்றனர்.



டெஸ்ட் அணி விவரம்: ரோஹித் சர்மா, கே.எல். ராகுல், ஷுப்மன் கில், புஜாரா, விராட் கோலி, கே.எஸ்.பரத் , இஷான் கிஷன், ரவிச்சந்திரன் அஸ்வின், அக்சர் பட்டேல், குல்தீப் யாதவ், ஜடேஜா, முகமது ஷமி, முகமது சிராஜ், ஸ்ரேயாஸ் ஐயர், சூர்ய குமார் யாதவ், உமேஷ் யாதவ், ஜெய்தேவ் உனத்கட்.

ஒருநாள் அணி விவரம்: ரோஹிகித் சர்மா, ஷுப்மன் கில், விராட் கோலி, ஸ்ரேயாஸ் ஐயர், சூர்யகுமார் யாதவ், கே.எல்.ராகுல். ஹார்திக் பாண்ட்யா, இஷான் கிஷன், ஜடேஜா, குல்தீப் யாதவ், வாஷிங்டன் சுந்தர், யஸ்வேந்த்ர சாஹல், முகமது ஷமி, முகமது சிராஜ், உம்ரான் மலிக், ஷர்துல் தாக்கூர், அக்சர் பட்டேல், ஜெய்தேவ் உனாட்கட்.

# அதிவேக 25,000 ஓட்டம் விராட் கோலி சாதனை!



புதுடில்லி, பெப். 20

இந்திய வீரர் விராட் கோலி சர்வதேச போட்டிகளில் அதிவிரைவாக 25 ஆயிரம் ஓட்டங்களை குவித்தவர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

இந்தியா - அவுஸ்திரேலியா இடையேயான போர்டர் - கவாஸ்கர் கிண்ணத் தொடர் நடைபெற்று வருகிறது. இதில், முதல் இரு டெஸ்ட் போட்டிகளிலும் இந்தியா வெற்றி பெற்றுள்ளது.

இரண்டாவது டெஸ்ட் போட்டி நேற்றைய தினம் முடிவடைந்தது. இதில், விராட் கோலி முதல் இன்னிங் ஸில் 44 ஓட்டங்களும், இரண்டாவது இன்னிங்ஸில் 20 ஓட்டங்களும் எடுத்தார்.

இந்த ஓட்டங்களின் மூலம் சர்வதேச கிரிக்கெட்டில் 25 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த 6ஆவது வீரர் என்ற பெருமையை அவர் பெற்றார். மேலும் இந்த மைல் கல்லை அதிவேகமாக எட்டிய வீரர் என்ற சாதனை யையும் கோலி படைத்தார்.

மேலும், இந்திய அணியை பொறுத்தவரை சச்சி னுக்கு பிறகு 25 ஆயிரம் ஓட்டங்களை எட்டிய 2ஆவது இந்திய வீரர் என்ற பெருமையை அவர் பெற்றார்.

சர்வதேச அளவில் விராட் கோலி 549 போட்டிகளில் 25 ஆயிரம் ஓட்டங்களை எடுத்தார். சச்சின் 577 போட்டிகளில் 25 ஆயிரம் ஓட்டங்களை கடந்திருந்தார். ரிக்கி பொண்டிங் 588 போட்டிகளிலும், ஜக் கலீஸ் 594 போட்டிகளிலும், குமார் சங்ககார 608 போட்டிகளி லும், மஹேல ஜெயவர்த்தன 701 போட்டிகளிலும் 25 ஆயிரம் ஓட்டங்ளை கடந்துள்ளனர். (ஐ)

# நியூசிலாந்தை 267 ஓட்டங்களால் வெற்றி கொண்டது இங்கிலாந்து

வெலிங்டன், பெப். 20

நியூசிலாந்து அணியை 267 ஓட்டங்களால் வெற்றி கொண்டது இங்கிலாந்து அணி. இதன் மூலம் இரு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் அந்த அணி 1 - 0 என்ற கணக்கில் முன்னிலை யிலுள்ளது.

இங்கிலாந்து - நியூசிலாந்து அணிகள் இடையிலான 2 போட்டி கள் கொண்ட டெஸ்ட் தொடரில் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மௌண்ட் மங்கனாவில் நடந்தது.

இதில் முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி 9 விக்கெட்கள் இழப்புக்கு 325 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தி யது. பதிலுக்கு முதல் இன்னிங்ஸை தொடங்கிய நியூசிலாந்து 306 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

19 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆடிய இங்கிலாந்து அணி 2ஆவது நாள் முடிவில் 2 விக்கெட் இழப்புக்கு 79 ஓட்டங் கள் எடுத்திருந்தது. மூன்றாவது நாள் ஆட்டத்தில், ஸ்ருவர்ட் பிரோட் 7 ஓட்டங்களி லும் ஒல்லி போப் 49 ஓட்டங்களிலும் நீல் வாக்னர் பந்து வீச்சில் ஆட்டமிழந்தனர்.

அடுத்து வந்த ஹாரி புரூக் 54, ஜோ ரூட் 57, அணித் தலைவர் பென் ஸ்டோக்ஸ் 31, பென் போக்ஸ் 51 ஓட்டங்களு டனும் ஆட்டமிழந்த னர். தேநீர் இடை வேளைக்கு பின்னர் இங்கிலாந்து சகல விக் கெட்களையும் இழந்து இங்கிலாந்து 374 ஓட்டங்களைக் குவித்தது.

நியூசிலாந்து தரப்பில் பிளேர் டிக்னெர், மிட்செல் பிரேஸ்வெல் தலா 3 விக்கெட்களையும் நீல் வாக்னர், ஸ்காட் குக்கலைன் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

394 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்கு டன் இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய நியூசிலாந்து அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி காத்து இருந்தது.

அந்த அணி 28 ஓட்டங்களுக் குள் 5 விக்கெட்களை இழந்து தடுமாறியது. கொன்வே 2, கேன் வில்லியம்சன் 0, ரொம் லதாம் 15, ஹென்றி நிகோல்ஸ் 7, டாம் பிளூான்டெல் ஓர் ஓட்டத்துடனும் அடுத்தடுத்து விக்கெட்டை இழந்தனர். நேற்று முன்தினம் ஆட்டம் முடிவில் நியூசிலாந்து அணி 23 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 63 ஓட்டங்கள் எடுத்து பரிதவித்தது . டரில் மிற்செல் 13 ஓட்டங்களுடனும், மிற்செல் பிரேஸ்வெல் 25 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று நான்காம் நாள் ஆட்டம் நடந்தது . தொடர்ந்து நியூசிலாந்து அணி விக்கெட்களை இழந்தது. அந்த அணியின் மிற்செல் பிரேஸ் வெல் 25 ஓட்டங்களில் ஆட்ட மிழந்தார். பின்னர் வந்த வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். மறுபுறம் டரில் மிற்செல் அரைச்சதம் அடித்து ஆட்டமிழக் காமல் இருந்தார். இறுதியில் நியூசிலாந்து 126 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது நியூசிலாந்து.

இதன்மூலம் இங்கிலாந்து 267 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இங்கிலாந்தின் பந்துவீச்சில் ஸ்ருவர்ட் பிரோட் , ஜேம்ஸ் அண் டர்சன் ஆகியோர் தலா 4 விக்கெட்களை வீழ்த்தினர். (ஐ)



## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:
# குற்றவாளிகளைத் தண்டிக்க அரசாங்கத்தை பரிந்துரைக்குக!

### மனித உரிமைகள் பேரவையிடம் வலியுறுத்து

கொழும்பு, பெப். 20

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களைத் திட்டமிட்டவர்கள், அவர்களுக்கு உதவி செய்தவர்கள், கட்டளையிடல் அதிகாரத்தின் அடிப்படையில் இந்தத் தாக்குதல்கள் தொடர்பில் நேரடியாக பொறுப்புக் கூறவேண்டியவர்களாவர். அத்துடன், அரசியல் தலைவர்கள், அரச அதிகாரிகள், பொலிஸ், புலனாய்வுத்துறை அதிகாரிகள் உள்ளடங்கலாக உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களைத் தடுக்காத அனைத்துத் தரப்பினருக்கும் உரிய தண்டனைகளை வழங்க வேண்டும் என்று அரசாங்கத்துக்கு பரிந்துரைக்குமாறு சர்வதேச மனித உரிமைகள் அமைப்பான பிரான்சிஸ்கன்ஸ் இன்டர்நஷனல் மற்றும் சமூக, சமய நிலையம் என்பன ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிடம் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

இது தொடர்பில் அந்த அமைப்புகள் மனித உரிமைகள் பேரவைக்கு கூட்டாக அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களில் 269 பேர் கொல்லப்பட்டனர். 500இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்று 3 வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் பாதிக்கப்பட்டோருக்கான நீதி நிலைநாட்டப்படவில்லை என்பதுடன் குற்றவாளிகள் தண்டனையிலிருந்து விடுபடும் போக்கு தொடர்கின்றது.

உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, ஜனாதிபதி ஆணைக்குழு மற்றும் பாராளுமன்றத் தெரிவுக்குழு என்பன நியமிக்கப்பட்டன.

இவற்றில் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை பகிரங்கப்படுத்தப்படவில்லை என்பதுடன் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை பகுதியளவிலும், பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கை முழுமையாகவும் பகிரங்கப்படுத்தப்பட்டன.

சமூக மற்றும் சமய நிலையத்தின் மேன்முறையீட்டை விசாரணைக்கு எடுத்துக்கொண்டதன் பின்னர் 2023 பெப்ரவரி 9 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையைப் பகிரங்கப்படுத்துமாறு தகவல் அறியும் உரிமை தொடர்பான ஆணைக்குழு கடந்த ஜனவரி 26 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்துக்கு உத்தரவிட்டது. இருப்பினும், அந்த உத்தரவுக்கு அமைய வெளியிடப்பட்ட அறிக்கையிலுள்ள முக்கிய பரிந்துரைகள் எவையும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்குரிய நீதியை வழங்கும் வகையில் அமுல்படுத்தப்படவில்லை.

இதேபோன்று அரசினால் உயிர்த்த ஞாயிறுதினத்தாக்குதல்களுடன் தொடர்புடைய சில வழக்குகள் தாக்கல் செய்யப்பட்ட போதிலும், தற்போது வரை அவ்வழக்குகள் தொடர்பில் இறுதித்தீர்ப்பு வழங்கப்படவில்லை. எனவே, உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதல்களுடன் தொடர்புடைய எந்தவொரு தரப்பினரும் இதுவரையில் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவில்லை. அதேபோன்று பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு உரியவாறான இழப்பீடு முழுமையாகப் பெற்றுக்கொடுக்கப்படவில்லை.

இவை அனைத்தையும் கருத்தில்கொண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் விசேட அறிக்கையாளர்கள் மற்றும் கண்காணிப்பாளர்களும் இலங்கை அரசாங்கத்துக்கு சில பரிந்துரைகளை முன்வைக்க வேண்டும்.- என்றுள்ளது.

(ஐ)

# புனர்வாழ்வு பெற்ற இளைஞருக்கு வெளிநாட்டில் தொழில் வாய்ப்பு!

கொழும்பு, பெப். 20

போதைப்பொருளுக்கு அடிமையாகி புனர்வாழ்வுக்காக சிறைச்சாலைகளுக்கு அனுப்பப்படும் இளைஞர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக அனுப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் துஷார உபுல் தெனிய தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலை திணைக்களத் தின் கட்டமைப்பு மாற்றங்கள் மற்றும் எதிர்வரும் வருடங்களுக்கான வேலைத்திட்டங்கள் தொடர்பில் நீதியமைச்சுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த தீர்மானம் எட்டப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், போதைப் பொருட்களுக்கு அடிமையாகி புனர்வாழ்வு நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை தொழில் வாய்ப்புகளுக்காக வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு சிறைச்சாலை திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, 16 முதல் 22 வயதுக்கு இடைப்பட்டவர்கள் இவ்வாறு வெளிநாடுகளுக்கு தொழில் வாய்ப்புக்காக அனுப்பவும் அவர்களுக்கு தேவையான வேலைவாய்ப்பு தொடர்பான பயிற்சி நெறிகளை தனியார் பல் கலைக்கழகங்கள் ஊடாக வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் முதல் கட்டமாக புனர் வாழ்வு நிலையங்களில் உள்ள பயிற்சி பெற்ற 50 இளைஞர்களை இவ்வாறு வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்புக்காக அனுப்புவதற்கு தீர்மானித்துள் ளோம் - என்றும் கூறினார்.

(ஐ)

# 100 வாகன உதிரி பாகங்கள் இன்று அழிக்கப்படுகின்றன

கொழும்பு, பெப். 20

கடந்த 5 வருடங்களில் சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட வாகன உதிரிபாகங்களில் ஒரு தொகை இன்று திங்கட்கிழமை கொடவத்தை கொள்கலன் முனையத்தில் அழிக்கப்படவுள்ளது.

சுங்கத் திணைக்களத்தின் விசாரணைக்கு பின்னர் இந்த வாகன உதிரி பாகங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அந்தத் திணைக்களத்தால் கைப்பற்றப்பட்ட இத்தகைய உதிரி பாகங்கள் பெருமளவில் உள்ளன அவற்றில் சுமார் 100 பாகங்கள் ஆரம்ப கட்டமாக அழிக்கப்படுகின்றன.

பிற பொருட்களை இறக்குமதி செய்வதாகக் கூறி இந்த உதிரிப் பாகங்கள் போலி ஆவணங்களை தயாரித்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இந்த உதிரிப் பாகங்கள் சந்தையில் வெளியிடப்பட்டால் தரமற்ற வாகனங்கள் கூட்டிணைக்கப்படும் அபாயம் உள்ளது. இதன் காரணமாக உதிரி பாகங்களை அழிக்க நடவடிக்கை எடுப்பதாக சுங்கத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

(ஐ)

# சஜித் அணிக்கு ஆதரவளித்த 65 பேரை நீக்க ஐ. தே. க. முடிவு

கொழும்பு, பெப். 19

ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவளித்த 65 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களை கட்சியிலிருந்து நீக்க ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு அனுமதி வழங்கியுள்ளது.

வெள்ளிக்கிழமை நடந்த ஐ. தே. கவின் செயல்குழுக் கூட்டத்தில் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

குறித்த 65 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் தொடர்பான, ஒழுக்காற்று விசாரணை நிறைவடைந்த நிலையில், அவர்களை கட்சியிலிருந்து நீக்க, தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, அவர்களின் கட்சி உறுப்புரிமையும், உள்ளூராட்சி மன்ற உறுப்புரிமையும் இரத்தாவதாக, ஐக்கிய தேசியக் கட்சியின் சட்டத்துறை செயலாளர் நிஸங்க நாணயக்கார தெரிவித்துள்ளார்.

(அ)

# எரிபொருளுடன் சென்ற பவுசர் 80 அடி பள்ளத்தில் விழுந்தது!

### - சாரதி, உதவியாளர் காயம் -



ஹற்றன், பெப். 20

நுவரெலியா - பதுளை வீதியில் ஹக்கல பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை எரிபொருள் பவுசர் விபத்துக்குள்ளானதில் அதன் சாரதியும் உதவியாளரும் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

கொலன்னாவை எரிபொருள் களஞ்சியசாலையிலிருந்து - கெப்பட்டிபொல எரிபொருள் நிலையத்திற்கு டீசல் ஏற்றிச் சென்ற பவுசரே ஹக்கல பூங்கா பகுதியில் சுமார் 80 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

சீரற்ற வானிலையால் சாரதியின் கட்டுப்பாட்டைமீறி வாகனம் விபத்துக்குள்ளாகியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

குறித்த பவுசரில் 13,200 லீற்றர் டீசல் இருந்ததாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. இந்த விபத்தில் குறித்த கொள்கலன் பவுசர் கடுமையாக சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

(ஐ)

# வெளிநாட்டு பறவைகள் பூங்கா இன்று கண்டியில் திறப்பு விழா!

கொழும்பு, பெப். 20

கண்டி- ஹந்தானையில் அமைக்கப்பட்டுள்ள இலங்கையின் முதலாவது வெளிநாட்டுப் பறவைகள் பூங்கா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 .00 மணிக்கு திறந்து வைக்கப்பட உள்ளது.

ஹந்தானை பிரதேசத்தில் தேயிலை ஆராய்ச்சி நிலையம் அருகாமையில் சுமார் 27 ஏக்கர் நிலப்பரப்பில் இந்தப் பறவை பூங்கா நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

49 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்தப் பூங்கா எதிர்வரும் 23ஆம் திகதி முதல் மக்கள் பார்வைக்காக திறக்கப்பட உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# இந்திய வீசா சேவை மீண்டும் ஆரம்பம்!

கொழும்பு, பெப். 20

பாதுகாப்பு சம்பவம் தொடர்பில் மூடப்பட்ட இந்திய வீசா விண்ணப்ப நிலையம் இன்று திங்கட்கிழமை முதல் மீண்டும் பணிகளை ஆரம்பிக்கிறது.

பாதுகாப்பு பிரச்னைகளை அடுத்து கொழும்பு இந்திய வீசா விண்ணப்ப நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# புதிய தேர்தல் முறையை ஏற்படுத்துவதை ஆராய்வதற்கு குழு ஒன்று அமைக்கப்படும்!

## ஜனாதிபதி ரணில் உறுதி

கொழும்பு, பெப். 20

தேர்தலின்போது வேட்பாளர் ஒருவர் அதிக பணம் செலவழிக்க வேண்டிய அவசியம் ஏற்படாத வகையில், தேர்தல் முறையை உருவாக்குவது குறித்து ஆராய குழு ஒன்று நியமிக்க எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக இளைஞர் குழு ஒன்றுடன் அண்மையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடந்த சந்திப்பில் ஜனாதிபதி இதனை குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் கொள்கைகள் தொடர்பில் இந்த இளைஞர்கள் குழு நாட்டின் பிரதான நாளிதழ் ஒன்றில் கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்ததுடன், அது தொடர்பில் மீளாய்வு செய்வதற்காக அந்த கட்டுரையை எழுதி வெளியிட்ட இளம் ஊடகவியலாளர்களான அனுஷ்கா ஜெயசூரிய மற்றும் செனோன் சல்காது ஆகியோருடன் தன்னை சந்திக்க வருமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த இளைஞர் குழுவுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

அதன்படி இந்த சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது, அந்த இளைஞர் குழுவினர் பிரச்னைகளையும் யோசனைகளையும் முன்வைத்தனர். அவர்களின் கேள்விகள் மற்றும் கருத்துக்களை ஜனாதிபதி செவிமடுத்ததுடன் அவர்களுடைய கேள்விகளுக்கும் பதிலளித்தார்.

பாடசாலை மட்டத்தில் முறையான மனநலக் கல்வி அவசியமானது எனவும் மாற்றுத்திறனாளிகளுக்கான முறையான கல்வி முறையின் அவசியத்தையும் இளைஞர் குழு வலியுறுத்தியதோடு, கல்வித்துறையில் உள்ள குறைபாடுகள் குறித்து இங்கு பிரதானமாக ஆராயப்பட்டது.

பாடசாலைகளில் மனநலம் தொடர்பில் வழங்கப்படும் கவனம் போதுமானதாக இல்லை எனவும் மனநல குறைபாடு உள்ளவர்கள் மற்றும் ஊனமுற்றவர்கள் தொடர்பில் அதிகமான விடயங்களை



செய்ய வேண்டியிருப்பதை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டார்.

பல நாடுகளில் வரி என்பது புதிய கருத்தல்ல. ஆனால், இலங்கையில் அவ்வாறில்லை என வரி விவகாரத்தை முன்வைத்து இளைஞர்கள் கேள்வி எழுப்பினர்.

அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பாராளுமன்றத்தினால் ஆராய முடியும் எனவும் அதற்காக பல குழுக்களை நியமித்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு, அரசாங்க கணக்குக் குழு மற்றும் பொது நிதிக் குழு உள்ளிட்ட மேலும் பல குழுக்கள் உள்ளன. அவற்றின் செயற்பாடுகளை மேலும் பலப்படுத்த பாராளுமன்ற வரவு - செலவுத் திட்ட அலுவலக சட்டமூலம் கொண்டு வரப்படும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

புதிய வரிகள் காரணமாக வெளிப்படைத்தன்மை பிரச்னையாக காணப்படுவதாகவும், திடீரென தமது சம்பளத்தில் பெரும் பகுதியை செலுத்த வேண்டியிருப்பதனால் மக்கள் அதனை கடுமையாக உணர்ந்துள்ளதாகவும் இளைஞர் குழு, ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டினர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

பெரிய வரவு - செலவுத் திட்டத்தில் அனைத்தும் முறையாக ஒதுக்கப்படுவதால் வெளிப்படைத்தன்மை இருக்கிறது. எந்தவொரு வரவு - செலவுத் திட்டத்திலும் பணம் முறையாக செலவிடப்படுவதை பாராளுமன்றம் தான் உறுதி செய்கிறது. எனவே, பாராளுமன்றம் தனது அதிகாரங்களை இப்போதே பயன்படுத்த வேண்டும்.

கடந்த முறையும் மேற்பார்வை குழுக்களின் தலைவர் பதவிக்கான வெற்றிடங்களை எதிர்க்கட்சிகள் நிரப்பவில்லை. இம்முறை அவர்கள் தெரிவுக்குழுக்களின் செயல்பாடுகளுக்காக பாராளுமன்றத்துக்கு வரவில்லை. ஆனால், அதற்கு எதிர்க்கட்சியில் இருந்து சில பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டன. அதுதான் வெளிப்படைத்தன்மை. செலவுகள் மற்றும் ஏனைய விடயங்களை பற்றி நீங்கள் அவர்களிடம் கேட்கலாம் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

மின்சார கட்டணத்தை அதிகரிப்பது போன்ற வேறு துறைகளில் இருந்து அரசாங்கம் சில செலவினங்களை குறைக்கவும் பணத்தை தேடவும் நேரிட்டுள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, இது இலகுவான காரியமல்ல் யாரேனும் இதைச் செய்ய வேண்டும் என்று சுட்டிக்காட்டினார்.

மேலும், இலங்கையின் பொருளாதாரம் தற்போது மிகவும் கடினமான நிலையில் உள்ளது. அதிலிருந்து மீள வேண்டும். இதற்காக கடனை மறுசீரமைக்க வேண்டும். கடனை மறுசீரமைக்க, நாம் செலவுகளை குறைக்கவோ அல்லது அதற்கான பணத்தை தேடவோ வேண்டும்.

சில துறைகளில் அவ்வாறு செய்தோம். ஆனால், சில துறைகளுக்கு நாம் பணம் தேட வேண்டும். அதனால்தான் அண்மையில் மின் கட்டணத்தை உயர்த்த நேரிட்டது. இப்படிச் செய்தாலும் மின்சார சபை நட்டத்தை எதிர்கொள்கிறது. இதற்கு வேறு வழியில்லை. இல்லாவிட்டால் மின்சாரம் இல்லாமல் வாழ நேரிடும். இந்த சூழ்நிலையில் இருந்து மீள வேண்டுமானால், சில விடயங்களை விருப்பமின்றி கூட செய்ய வேண்டியிருக்கும். - என்றார். (ஐ)

## ஐ.எம்.எவ்...

ஜனாதிபதி ஸீ ஜின்பிங்குடன் பேசுவதற்காக கடந்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டார். ஆனால், அவரின் அழைப்புக்கு சீன ஜனாதிபதி தொடர்புக்கு வர மறுத்துவிட்டார்.

வேறு வழிகளில் முயன்றும் சீன ஜனாதிபதியை ரணில் விக்கிரமசிங்கவால் தொடர்பு கொள்ள முடியவில்லை. இந்த நிலையில், இலங்கைக்கு தற்போது ஐ. எம். எவ்வின் கடன் கிடைக்காமல் போவதற்கான சந்தர்ப்பம் எழுந்துள்ளது.

அடுத்த மாதத்துக்குள் இலங்கைக்கு ஐ. எம். எவ்வின் கடன் தொடர்பில் நல்ல பதில் கிடைக்கும் என்றும் மார்ச் மாதம் கடன் கிடைக்கும் எனவும் கூறப்பட்டு வரும் நிலையில், சீனாவின் பதில் இல்லாமலேயே இலங்கைக்கு கடனுதவி வழங்குவதற்கு ஒப்புதல் வழங்குவதற்கான பிரேரணையை நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையில் சமர்ப்பிக்க அரசாங்கம் தற்போது தீர்மானித்துள்ளது.

இதில், அனுமதி கிடைக்காத பட்சத்தில், மறுசீரமைக்கும் சீனாவின் கடிதம் இல்லாமல் ஐ. எம். எவ்வுடனான பேச்சுகளை தொடரும் நிலை இலங்கைக்கு ஏற்படும். ஆனால், சீனாவிடம் இருந்து தேவையான கடிதம் இல்லாமல் பேச்சைத் தொடர ஐ. எம். எவ். தயாரா என்பது சந்தேகமே.

இலங்கையின் மிகப் பெரிய கடன் வழங்குநராக சீனா இருப்பதால், அவர்களின் கடன் மறுசீரமைப்பு அத்தியாவசியமானது. ஏனைய நாடுகளைப் போன்று சீனாவும் இலங்கைக்கு சமமான பங்களிப்பை வழங்க வேண்டும் என்று ஐ. எம். எவ். பல சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டுள்ளது. இதன்படி, சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பெறப்பட வேண்டிய நிதி தொடர்பாக புதிய நெருக்கடியை அரசாங்கம் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. (ஐ-சி)

## உள்ளூராட்சி...

தேர்தலை நடத்துவதாக உயர்நீதிமன்றத்துக்கு வாக்குறுதி வழங்கினோம். வழங்கிய வாக்குறுதிக்கு அமைய தேர்தல் பணிகளை தொடரு மாறு உயர்நீதிமன்றம் ஆணைக்குழு வுக்கு அறிவுறுத்தியது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்கெடுப்புக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆயிரம் கோடி ரூபாயை மதிப்பிட்டோம். ஆனால், அந்தத் தொகையை திறைசேரியிடமிருந்து முழுமையாக கோரவில்லை. ஆரம்பகட்ட பணிகளை கூட முன்னெடுப்பதற்கு தேவையான நிதியை கட்டம் கட்டமாக விடுவிப்பதை திறைசேரி தாமதப்படுத்துகிறது.

நிதி நெருக்கடியால் தபால் மூல வாக்குச்சீட்டு அச்சிடல் பணிகளை அரச அச்சக திணைக்களம் கடந்த திங்கட்கிழமை இடைநிறுத்தியது. நிதி விடுவிப்பு தொடர்பில் திறைசேரியிடம் மேற்கொண்ட பேச்சு வெற்றி பெறவில்லை.

இந்த நிலையில், தேர்தல் நடவடிக்கைகளுக்கு தேவையான நிதியை ஒதுக்குவது கடினமானது என திறைசேரி அறிவித்துள்ளது.

நிதி நெருக்கடியால் எதிர்வரும் 23, 24 மற்றும் 28ஆம் திகதிகளில் இடம்பெறவிருந்த தபால்மூல வாக்கெடுப்பு மறுஅறிவித்தல் விடுக்கும் வரை பிற்போடப்பட்டுள்ளது. இவ்வாறான பின்னணியில் மார்ச் மாதம் 9ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது நிச்சயமற்றதாக உள்ளது. ஆகவே உயர்நீதிமன்றத்துக்கு வழங்கிய வாக்குறுதியை எம்மால் நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

உறுதியளித்தபடி தேர்தலை நடத்த முடியாததை உயர்நீதிமன்றுக்கு அறிவிப்போம். அத்துடன், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பிலும் புதன்கிழமை உத்தியோகபூர்வமாக அறிவிப்பை வெளியிட எதிர்பார்த்துள்ளோம் என்றார்.

## மகிந்தவுக்கு...

மகிந்த ராஜபக்ஷ உயர் அரச பதவியில் - அரசாங்கத்தை தீர்மானிப்பவராக இருக்க வேண்டும் என்று அந்தக் கட்சியினர் நம்புகின்றனர். இதனை பஸில் ராஜபக்ஷ உள்ளிட்ட பலரும் வெளிப்படையாகவும் கூறியுள்ளனர்.

இந்த நிலையில், அந்தக் கட்சியின் மூத்த தலைவர்கள் பலர் மகிந்த ராஜபக்ஷவுக்கு பிரதமராக்கும் முயற்சிகளை தொடங்கியிருந்தனர். மகிந்த ராஜபக்ஷ தரப்பும் பதவியேற்புக்கு சம்மதம் தெரிவித்துவிட்டது.

இந்த நிலையில், அவர் பிரதமராவதற்கு தடையாக இருப்பவர் தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்த்தனதான். அரசாங்கத்தின் மூத்த உறுப்பினரான அவரிடம் பதவி விலகும் கோரிக்கையை திடீரென முன்வைக்க முடியாது என்று பெரமுனவினர் கருதுகின்றனர்.

இந்த நிலையில், கடந்த வாரம் ராஜபக்ஷ குடும்பத்தினர் மகிந்த ராஜபக்ஷவுக்கு அந்தப் பதவியை விட்டுக்கொடுக்குமாறு தினேஷ் குணவர்த்தனவிடம் அதிகாரபூர்வமற்ற முறையில் கேட்டனர்.

ஆனால், அவர்களின் இந்தக் கோரிக்கைக்கு தினேஷ் குணவர்த்தன தரப்பில் மௌனமே பதிலாகக் கிடைத்துள்ளது என்று கூறப்படுகின்றது. இந்நிலையில், மீண்டும் மீண்டும் தினேஷ் குணவர்த்தனவிடம் இதே கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. அவற்றுக்கும் எவ்விதமான சாதகமான பதிலையும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன வழங்கவில்லை என்று நம்பிக்கையான அரச வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## இரவு...

மணிக்கு, பிரதான ஆளி மூலம் உங்கள் வீட்டின் மின் கட்டமைப்பை அணைக்கவும். மின் விளக்குகள், மின்சாதனங்களைப் பயன்படுத்துவதை நிறுத்தவும். உங்கள் வீட்டு மின் விளக்குகளை அணைக்கவும். இதன் விளைவை அடையாளபூர்வமாக பிரபலப்படுத்துவோம்." என்றார். (ஐ)

## இந்திய...

சந்திக்க முயன்றும் ரணிலுக்கு தோல்வியே கிட்டியது. அண்மையில், இலங்கை வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் பிரதமர் மோடியை சந்திக்க வருமாறு அழைப்பு விடுத்து சென்றுள்ளார்.

ஏற்கனவே, திட்டமிடப்பட்ட திகதியின்படி இன்னும் சில நாட்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பிரதமரை சந்திப்பார் என்று அறிய வருகின்றது. (ஐ-சி)

# அனைத்து பாடசாலைகளும் இன்று ஆரம்பம்

கொழும்பு, பெப். 20

அனைத்து அரச பாடசாலைகளும் மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைக்காக இன்று திங்கட்கிழமை மீண்டும் திறக்கப்படவுள்ளன.

இன்று ஆரம்பமாகும் மூன்றாம் தவணையின் மூன்றாம் கட்டம், எதிர்வரும் மார்ச் 24 ஆம் திகதி வரை தொடரும் என்றும், 2023 ஆம் ஆண்டின் முதலாம் தவணை மார்ச் 27 ஆம் திகதி முதல் தொடங்கும் எனவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், முதலாம் தரத்துக்கு மாணவர்களுக்கான புதிய பாடசாலை தவணை, முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன. (ஐ)

ஈழநாடு
Eelanadu ஈழநாடு

உள்ளூராட்சி தேர்தலுக்கு இடையூறு:

# அரச நிறுவனங்களுக்கு எதிராக நீதிமன்றை நாட கட்சிகள் முடிவு

கொழும்பு, பெப். 20

தேர்தலை நடத்த இடையூறு செய்யும் அனைத்து அரச நிறுவனங்களுக்கும் எதிராக நீதிமன்றத்தை நாடுவதற்கு பல தரப்பினரும் தீர்மானித்து வருகின்றனர்.

இதன்படி, ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, சிறீ லங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட கட்சிகள் நீதிமன்றத்தை அணுகத் தீர்மானித்துள்ளன.

குறிப்பாக, கருவூல செயலாளர் மற்றும் அரசாங்க அச்சகத்துக்கு எதிராக முறைப்பாடு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வாக்கெடுப்பை நடத்த வேண்டாம் என்று ஓய்வு பெற்ற கேணல் விஜயசுந்தர தாக்கல் செய்த முறைப்பாட்டின் தீர்ப்புக்கு பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-சி)

# பணம் அச்சிடல் நின்றால் வட்டிவீதம் மேலும் உயரும்!

## நிபுணர்கள் எச்சரிக்கை

கொழும்பு, பெப். 20

இலங்கை மத்திய வங்கி பணம் அச்சிடுவதை இடைநிறுத்தினால் வட்டிவீதங்கள் மேலும் உயரும் என்று பொருளாதார ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் கூறியவை வருமாறு,

திறைசேரியின் நிதித் தேவைக்கு ஏற்ப தேவையான பணத்தை மத்திய வங்கி அச்சடித்து வழங்குவதே இதுவரை வழக்கமாக நடந்து வந்தது. அது இடைநிறுத்தப்பட்டால், கருவூலம் மாற்று வழிகளில் பணத்தைப் பெற வேண்டும்.

நாட்டின் பொருளாதாரம் தாங்கும் அளவுக்கு பணத்தை அச்சடிக்கும் அதிகாரத்தை மத்திய வங்கிக்கு வழங்கும் புதிய சட்டம் தொடர்பிலும் கடந்த வாரம் அமைச்சரவை விசேட தீர்மானம் ஒன்றை எடுத்துள்ளது. இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியால் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த முடிவின் மூலம், அரசு நிதி அமைச்சிடம் எத்தனை கோரிக்கைகளை முன்வைத்தாலும், பணத்தை அச்சிடாத அதிகாரம் மத்திய வங்கிக்கு கிடைக்கும்.

நாட்டின் பொருளாதாரத்தை முறைப்படுத்துவதற்காக சர்வதேச நாணய நிதியம் வழங்கிய பரிந்துரையின் பிரகாரம் இந்த புதிய ஏற்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

# நீதிமன்றில் அமைதி பேணாத பெண்ணுக்கு விளக்கமறியல்!

யாழ்ப்பாணம், பெப். 20

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நடவடிக்கையின்போது இடையூறாக செயல்பட்ட பெண் ஒருவர் நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நடவடிக்கைகள் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றவேளை போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் முற்படுத்தப்பட்ட சந்தேக நபரை பார்க்க அவரின் தாயார் வந்துள்ளார். அவர் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறாக மகனை சந்திக்க முற்பட்டுள்ளார்.

அந்தப் பெண்ணை அமைதி பேணுமாறு நீதிமன்ற பொலிஸ் உத்தியோகத்தர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். எனினும், அவர் சத்தமிட்டதால் கைது செய்யப்பட்டார்.

நீதிமன்றில் பொலிஸாரின் கடமைக்கு இடை யூறு விளைவித்தமை, நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் நீதிமன்ற அவமதிப்பு குற்றத்தை புரிந்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் பெண் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

வழக்கை ஆராய்ந்த யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிவான் சந்தேக நபரை வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ஐ)

# மின்சார கட்டண உயர்வால் மகிந்தவுக்கு பெருஞ்சிக்கல்!

கொழும்பு, பெப். 20

**கடந்த வாரம் மின்சார கட்டணம் உயர்ந்ததே நாட்டில் மிகுந்த முக்கியத்துவம் பெற்றது. இதனால், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதிகம் அசௌகரியத்துக்கு உள்ளானார் என்று கூறப்படுகின்றது.**

அவரின் நண்பர்கள், ஆதரவாளர்கள் மற்றும் அவரின் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் இந்த விடயம் தொடர்பில் மகிந்த ராஜபக்ஷவிடம் அதிகம் முறையிட்டிருந்தனர் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும், இது விடயத்தில் தன்னிடம் முறையிட்டவர்களுக்கு அவரால் பதில் எதனையும் வழங்க முடியவில்லையாம்.

இந்தநிலையில், மின்சார கட்டண உயர்வால் "நாம் அரசியல் செய்வது மிகவும் கடினம்", என்றும் அவரின் கட்சியினர் அவருக்கு எச்சரித்துள்ளனராம்.

இதைத் தொடர்ந்து, மகிந்த ராஜபக்ஷ மின்சார கட்டணத்தை குறைப்பது தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சரையும் அமைச்சரவையையும் கோருவது என்று தீர்மானித்துள்ளாராம் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-சி)

# நகைகளை அடகு வைத்தே பலர் தேர்தலில் போட்டியிடுகின்றனர்

## சுரேஷ் பிறேமசந்திரன்

யாழ்ப்பாணம், பெப். 20

"வடக்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் பெரும்பாலான வேட்பாளர்கள் பொருளாதார நிலையில் பின்தங்கியவர்கள். சிலர் தம்மிடம் உள்ள தங்க நகைகளை அடைமானம் வைத்து பிரசாரம் செய்ய தொடங்கிவிட்டனர். அவை வீணாகிவிடும்", என்று ஈ. பி. ஆர். எல். எவ். கட்சியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

நிதி நிலைமை மற்றும் பாதுகாப்பு தொடர்பான பிரச்னைகள் தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை எடுக்காமல் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணையாளரும் பொறுப்பேற்க வேண்டும். நிதியமைச்சுகூட பல தடவைகளில் பணம் வழங்குவதில் சிரமம் இருப்பதாகக் கூறியது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை திட்டமிட்டபடி நடத்த வேண்டும். பொதுஜன பெரமுன உள்ளிட்ட ஆளும் கட்சி தேர்தலில் தோற்கப் போவதாகவும், அதனால் தேர்தலை ஒத்திவைக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டு வருவதாகவும் தேர்தல் பிற்போடப்பட்டால் அதற்கு தேவையான நடவடிக்கைகளை தமது கட்சி மேற்கொள்ளும் என்றும் சுரேஷ் பிறேமசந்திரன் நேர்காணல் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். (ஐ-சி)

# மின்சார உற்பத்திக்கு இந்தியாவிலும் அதிக தொகை செலவிடும் இலங்கை!

கொழும்பு, பெப். 20

இந்தியா ஓர் அலகு மின்சாரம் தயாரிக்க செலவிடும் தொகையைவிட 100 மடங்கு அதிகமான தொகையை இலங்கை செலவிடுகின்றது என்று இந்திய அரசாங்கத்தின் எரிசக்தி அமைச்சு சமீபத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதன்படி, இந்தியாவில் ஓர் அலகு மின்சாரம் தயாரிக்க செலவிடப்படும் தொகை (இலங்கை மதிப்பில்) 25 ரூபாய்தான். ஆனால், இலங்கை தற்போது ஓர் அலகு மின்சாரத்தை உற்பத்தி செய்ய 52 ரூபாயை செலவிடுகின்றது.

இந்தியாவில் மின்சார உற்பத்தி செலவு பெருமளவு குறைவதற்கும் இலங்கையில் மின்சார உற்பத்திச் செலவு ஏறக்குறைய 100வீதம் அதிகரிப்பதற்கும் முக்கிய காரணம் இந்நாட்டில் மின்சார உற்பத்திக்காக எரிபொருளான நிலக்கரி மற்றும் தண்ணீரை அதிகளவில் பயன்படுத்துவதே ஆகும்.

இலங்கையில் காற்றாலை மின்சாரம் மற்றும் சூரிய சக்தி மின்சார உற்பத்தி என்பன உள்ளபோதிலும் அவை மிகச்சிறியளவே. ஆனால், இந்தியா தனது மின்சார உற்பத்தி செலவை வெகுவாகக் குறைக்கும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனெனில் அந்த நாடு சூரிய சக்தி, அணுசக்தி, காற்றாலை மற்றும் நிலக்கரி போன்ற பல ஆற்றல் உற்பத்தி ஆதாரங்களை விகிதாசாரமாகப் பயன்படுத்தி வருகின்றது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-சி)

# பாழடைந்த கிணற்றில் இரு சிறாரின் சடலங்கள்

## சந்தேகத்தில் தாய் கைது

கொழும்பு, பெப். 20

பாழடைந்த கிணற்றிலிருந்து இரண்டு சிறுவர்களின் சடலங்களை பொலிஸார் நேற்று மீட்டனர்.

இரத்தினபுரி - குருவிட்டை புனித ஜோக்கிம் தோட்டத்தின் 16 ஏக்கர் பிரிவைச் சேர்ந்த குறித்த சிறுவர்களுள் ஒருவர், புனித ஜோக்கிம் தமிழ் மகா வித்தியாலயத்தில் தரம் 2 இல் கல்வி கற்று வரும் சரவணா என்றும் மற்றையவர் அவரின் ஒன்றரை வயது சகோதரன் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இரு சிறுவர்களையும் தாயையும் கடந்த இரு நாட்களாக காணவில்லையென கூறி , தந்தை தனது மனைவியின் சொந்த ஊரான களுத்துறைக்கு சென்றிருந்த நிலையிலேயே சிறுவர்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இதன் பின்னர், தாயும் பிரதேசவாசிகளால் கண்டுபிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்த சிறுவர்கள் இருவரும் தாயால் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் தாய் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# சிறைக் கைதிகளின் உணவுக்கு வருடம் 700 கோடி ரூபாய் செலவு

கொழும்பு, பெப். 20

நாடளாவிய ரீதியில் சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளுக்கு வருடத்துக்கு உணவு வழங்குவதற்காக 700 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது.

மேலும், நாட்டில் உள்ள சிறைச்சாலைகளை இயக்குவதற்கு வருடமொன்றுக்கு ஆயிரத்து 100 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது என்று சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்தார்.

அதன்படி, சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் உணவுக்காக மாத்திரம் வருடமொன்றுக்கு 740 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது.

மேலும், நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து சிறைச்சாலைகளையும் இயக்குவதற்காக வருடமொன்றுக்கு ஆயிரத்து 100 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது.

இந்நிலையில், வரி செலுத்தும் மக்களின் பணத்தில் சிறைச்சாலைகளை பராமரிக்காமல், தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளை தொழில் முயற்சிகளில் ஈடுபடுத்தி அதன் மூலம் கிடைக்கப்பெறும் பணத்தை கொண்டு சிறைச்சாலை கட்டமைப்புகளை பராமரிப்பதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.02.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.